துணை.

செ… தமி…

தொகுதி-ரு] பராபவ … [பகுதி-௨.

# புதுவைச் சேதிராயன்.

புதுவை நகர்க்கு அதிபனுன சேதிராயன் என்பான், கம்பர் ஏரெழுபதுபாடி அரங்கேற்றும்போது, சபையிலிருந்து கேட்ட வெண்ணைச்சடையன் முதலிய வேளாளச் செல்வருள்ளே ஒருவன். அந்நூல் அரங்கேறி வருங்கால், இச்சேதிராயனை நாகமொன்று கடிக்க, இவன் அச்செய்தியை அவைக்கறியாமலே யிருந்து, ஏரெழுபது கேட்டபடியே விஷந்தலைக்கேறிவிழ, அப்போதுதான், கம்பர் "ஆழியான்பள்ளியணையே" "மங்கையொரு" என்னும் பிரசித்த வெண்பாக்கள்பாடித் தம்தெய்வசக்தியால் அவ்விஷத்தை யிறக்கிச் சேதிராயனை உயிர்ப்பித்தனர். இவற்றை, மேற்குறித்த வெண்பாக்களின் தலைப்பில் "கம்பர், ஏரெழுபதுபாடி அரங்கேற்றும் போது புதுவைச்சேதிராயனை விடந்தீண்ட, தீர்த்தவை" என்னுங் குறிப்புத் தமிழ்நாவலர் சரிதையிற் காணப்படுதலாலும்,

"அழுவதுங் கொண்டு புலம்பாது நஞ்சுண் டதுமறைத்தே
ரெழுபதுங் கொண்டு புகழ்க்கம்ப வாண னெழுப்பவிசை
முழுவதுங் கொண்டொரு சொற்பேச செய்யின் முழுகிங்கையின்
மழுவதுங் கொண்டு புகழ்கொண்ட தாற்றொண்டை மண்டலமே

(தொண்டைமண்டல சதகம்)

"குணங்கொள்சடையன் புதுச்சேரிக் கொடையன்சேதி ராயன்முதற்
கணங்கொள்பெரியோர் பலர்கூடிக் கம்பநாடன் கவிகூர
விணங்கும்பரிசி லீந்துபுவி யேழுய்புகழே ரெழுபதெனும்
மணங்கொள்பெருங்காப் பியப்பனுவல் வளஞ்சேர் சோழமண்டலமே

(சோழமண்டல சதகம்)

"பாவலர்தாழ் — — ழுப் தோதியர்ங் சேற்றுங் களரியிலே
காரிவிட நாகங் கடிக்குங்கை" (திருக்கைவழக்கம்)

என்னும் பாடல்களாலும் நன்கறியலாம்.

இனி, இப்புதுவைச்சேதிராயன் என்பவன் யாவன்? என் நண்பர் ஸ்ரீமத்-பின்னத்தூர் - நாராயணசாமி ஐயரவர்கள், "செந்தமிழ்" நான்காந்தொகுதி ஐந்தாம்பகுதியிலே, "வெண்ணையூர்ச்சடையபிள்ளையென்கிற புதுவைச்சேதிராயர் கல்வெட்டுக்கள்" என்னுந் தலைப்பின் கீழ்ச் சிலஅரும்பாடல்கொண்ட சாஸனங்களை வெளியிட்டிருக்கிறார்கள். ஐயரவர்கள்கருத்து, சடையனுஞ் சேதிராயனும் ஒருவரே யென்பதை, அவர்களிட்ட தலைப்பெயரே விளக்கும். அவ்வாறு கொண்டதற்கு, அவர்கள் வெளியிட்ட சாஸனங்களுள் "தேமாவயங்கு...... சேதிபர்கோன், மாமால் புதுவைச்சடையன்" என்னுந் தொடரே காரணமாதல் வேண்டும். ஏனெனில் அக்கொள்கையை ஆதரிக்கும் வேறுதொடர் அச்சாஸனங்களுள் காணப்படவில்லை. ஐயரவர்கள் கருத்துப்படி, அவ்விருவரும் ஒருவரே என்பது உண்மையானல், மேலே காட்டியவாறு, "குணங்கொள் சடையன் புதுச்சேரிக்கொடையன் சேதிராயன் முதற்கணங்கொள் பெரியோர் பலர் கூடி" எனவும் பிறவாறும், சோழமண்டல சதகமுடையார், சடையனின் வேறாக வைத்துப் புதுவைச்சேதிராயனைக்கூறியது தவறாம். ஆனல், ஐயரவர்கள் கூற்றும் சதகமுடையார் கூற்றும் மாறுபடுவதுபோற்றோன்றினும் உண்மையில்அவ்விருவர் கொள்கையும் தவறாகக்கொள்ளப்படா. என்னை?.சேதிநாடென்பது சோழ தொண்டை மண்டலங்கட்கு இடைப்பட்ட பிரதேசமாம். இதுபற்றி அது 'நடுநாடு' எனவும் வழங்கும். சோழநாட்டு வெண்ணைநல்லூர்க் குரிய * சடையன் நடுநாட்டிலுங் காணிவளம் பெற்றவனாகலின், அவன் 'சேதிபர்கோன் மாமால் புதுவைச்சடையன்" எனச்சாஸனத்தில் அடுக்கப்பட்டான். அதுபற்றி, 'வெ

* இது, நடுநாட்டுள்ள திருவெண்ணெய் நல்லூரன்றெனவும், சோழநாட்டு மாயூரத்துக்கு மேல் பக்கத்திருந்த தெனவும், இவ்வுண்மையை வற்புறுத்தப்பலகாரணங்களுண்டெனவுங் கேள்வியால் அறியப்படுகின்றது. 'தொண்டை மண்டல சதகத்தால்,'' இவ்வெண்ணைச் சடையற்குத் தொண்டைநாட்டிலுங்காணிவளமிருந்த தென்பது வெளியாம்.

ண்ணையூர்ச் சடையபிள்ளை யென்கிற புதுவைச்சேதிராயர்" என ஸ்ரீமத்-நாராயணசாமி ஐயரவர்கள் கூறியது அப்மட்டிற் பொருத்த முடையதே. ஆயின், சடையனின்வேறாகப் புதுவைச்சேதிராயனை எண்ணிய சோழமண்டலசதகமுடையார் கூற்று இதனால் பாதிக்கப்படாதோவெனின், அடியிற் காட்டப்படும் பாடல் இதற்குத் தக்க விடையளிக்குமென்று நம்புகிறேன்.

"பழுத்து டைந்தகனி நெக்கு நெக்குருகு
　　சாறு வீழலடி சேறெழும்
பலபெருஞ் சுளையை யருத மென்றுவெயில்
　　படவொ ணுதென மறைப்பபோல்
பொழிற்பு றஞ்சொரியு மூகிலி னந்தழுவு
　　புதுவை வாழ்சடைய னுதவுசேய்
பூதலம்பரவு சேதிபன் றனது
　　பொன்னி நாடனைய பூவையாள்
விழித்த னந்தலொ டெழுந்தி ருந்ததுவ
　　மெய்த்து வட்சிபு மகிழ்ச்சியு
மென்ம ருங்கினி லெடுத்து நெத்ததுவும்
　　மேக லைத்தலை யணைத்ததும்
வழுத்தி நின்றுதிரு நீறு தந்துவிடை
　　தந்த பார்வையை மறப்பினும்
வாச லின்படி பிடித்து நின்றநிலை
　　மனம றப்பதிலை காணுமே"*

இப்பாட்டில், "புதுவைவாழ் சடைய னுதவுசேய் பூதலம்பரவு சேதிபன் றனது பொன்னிநாடு" என்னுந் தொடரால், சடையனின் வேறாகச் சேதிபன் ஒருவனுண்டென்பதும், அச்சேதிபனும் முன்னவனுக்கு மகனாதல் வேண்டுமென்பதும் தெளிவாதல் காண்க. ஸ்ரீமத்-நாராயணசாமி ஐயரவர்கள் காட்டிய சாஸனப்பாடல்களாலும் இவ்விஷயம் வற்புறுத்தப்படுவதை நாம் காணலாம். அப்பாடல்களில்,

† "தேமா வயங்குசெய் யா... ..பொற்கடற் சேதிபர்கோன்
　　மாமால் புதுவைச் சடையன் னினென் மங்கை

* சோழமண்டலசதகம் (மேற்கோள்;) தனிப்பாடற்றிரட்டு(௬௬வது பதிப்பு) பக்கம் ௬௮.

† இப்பாடல் சிதைந்துள்ளது.

ஆமா மணையந்த வாயிழை செந்த...தாசை யெல்லாம்
போமாறு கண்டுவிட் டாளென்று கூறுமப் பூந்தொடிக்கே."

"மெய்கழுவி வந்து விருந்துண்டு மீளுமவர்
கைகழுவ நீர்போதுங் காவிரியே—பொய்கழுவும்
(போர்) வேற் சடையன் புதுவையா னில்லறத்தை
யார்போற்ற வல்லா ரறிந்து"

என்னும் செய்யுளிரண்டும் சடையனையும்,

"காவிரியைச் சோணாட்டைக் காராளர் தம்மரபை
நாவலரைக் காவலரை நல்லோரைப்—பூவலய
முள்ளத் தரும்புதுவை யூரைச் சிறப்பித்தான்
பிள்ளைப் பெருமாள் பிறந்து"

"பேரோசைப் பிள்ளைப் பெருமாளைச் சேதிபனைக்
காரோசைக் கையானைக் கண்டீரே—பாரோர்
விடுங்கோள் தொடுங்கோ (ள்) விழியருள்பூண் டன்ன
மிடுங்கோள் கொடுங்கே....

என்னும் வெண்பாக்கள் அச்சடையன் மகனையும் பற்றிவந்தன எனத் துணியப்படும். ஏனெனில், முதலிற் குறித்த பாடலிரண்டினும் சடையனைப்பற்றித் தெளிவாகக் கூறப்பட்டிருக்க; பிற்காட்டியவற்றில் அவ்வாறு கூறப்படாததோடு, "பிள்ளைப்பெருமாள் பிறந்து" "பிள்ளைப்பெருமாளைச்சேதிபனை" என, அப்பிற் பாடல்களில், சடையற்கு மகன் சேதிபன் என்பது குறிப்பிக்கப்பட்டிருத்தல் நோக்குவார்க்குத் தெளிவா மன்றோ?

இவற்றால், சேதிபன் அல்லது சேதிராயன் என்பவன் வெண்ணைச் சடையற்கு மகனும் வள்ளலாயும் விளங்கினவனென்றும், அவனே - கம்பர் ஏரெழுபது அரங்கேற்றும்போது விடந் தீண்டப்பட்டு, அப்புலவர் பெருமானால் அது நீக்கப்பெற்றவனென்றும், அவன் தந்தையாகிய சடையற்கு வழங்கிய "புதுவையர்கோன்" "சேதிபர்கோன்" என்னும் விசேடணங்கள் அவன்றனக்கும் முறைப்படி எய்தினவென்றும், அவனுக்குப் "பிள்ளைப்பெருமாள்" என்பதும் பெயரென்றும், ஆகவே, ஸ்ரீமத்-நாராயணசாமிஐயரவர்கள் காட்டிய சாஸனம் வெண்ணைச்சடையனை மட்டுமன்று: புதுவைச்சேதிராயன் என்னும் பெயர்வழக்கை மிகவுடைய அச்சடையன் மகனையும் பற்றியதென்றும் நாம் தெரிந்து கொள்ளலாம்.

பத்திராசிரியர்.

# பாரதம்பாடிய பெருந்தேவனார்.

கடைச்சங்கப்புலவரென்று புகழ்பெற்ற பாரதம்பாடிய பெருந்தேவனார் தம் உத்தியோக பருவத்து முதலில்,

"வண்மையாற் கல்வியான் மாபலத்தா லான்வினையால்
உண்மையாற் பாரா ளுரிமையாற்—றிண்மையால்
தேர்வேந்தர் வானேறத் தெள்ளாற்றில் வென்றானே
டியார்வேந்த ரேற்பா ரெதிர்"

என்றோரரசனைக்குறிக்கிறார். இவ்வரசனிவரை வெகுமானித்து வந்தவனென்றும், அதற்காக அவனைப்புகழ்ந்து இவர்பாடினார் என்றும் ஊகிக்கப்படுகிறது. ஆயின் இவ்வேந்தன் இன்னான் என்று விளங்காவரை இப்பாட்டு ஒருவகையாலும் உபயோகப்படாது. இவன் யாவனென்பது சிலாசாசனங்களாலும், நந்திக்கலம்பகத்தாலும் ஏற்படுகிறபடியால் இப்புலவர்காலம் நிர்ணயிக்கக் கூடியதாயிருக்கிறது. அதை அடியில் ஒருவாறு நிச்சயிக்க முயலுவோம்.

நந்திக்கலம்பகத்தில் பாடப்பெற்றவரசன் நந்திவர்ம்மனென்றும் அவன் பல்லவர் வம்சத்தானென்றும்,

மல்லைவேந்தன் மயிலைகாவலன்
பல்லவர் கோன்றல் பைந்தார் நந்தி, (பா-1)

என்றும்,

பல்லவர் கோனந்தி, (பா-15)

என்றும்,

புகட்பல்லவ
னமர் கோமா னடுபோர் நந்தி, (பா-23)

என்றும்,

பைந்தார்நந்திப் பல்லவர் கோன் (பா-35)

என்றும் பற்பல விடங்களில் கூறியிருப்பதினா லறியலாம். இவன் அவனிநாராயணன், விடேல் விடுகு, குவலயமார்த் தாண்டன், மானோதயன், தேசபண்டாரி, வரதுங்கன், தியாகி, நந்திச்சிராமன், என்னும் பற்பல மறுபெயர்கள் பூண்டவன். இவ்வரசன், இக்கலம்பகத்தின்படி, குருக்கோட்டைவென்றதாயும், தெள்ளாற்றில் சில பகைவரைத்துரத்தி யடித்ததாயும், பழையாற்றுச்சண்டை வென்ற

தாயும் புகழப்பட்டுள்ளான். அன்றியும் இவ்வரசனுக்கும் இவன் தம்பியர்க்கும் விரோதமிருந்திருக்கவேண்டு மென்றும், இத்தம்பியர்க்குத் துணையாய்த் தமிழ்நாட்டுச்செம்பியர், தென்னர், சேரரிம்மூவரும் கூடியிருந்திருக்கவேண்டுமென்றும்,

> தம்பியரெண்ணமெல்லாம் பழுதாக வென்ற
> தலைமான வீரத்தவன்
> செம்பியர் தென்னர் சேரரெதிர்வந்துமாயச்
> செருவென்ற பாரில் (பா-81)

என்பதினாலும்,

> தன்கோல்வளைத்ததிகழ் சேரர்சோழர்தமிழ்
> மன்னர்நின்றநிலமேல்
> வெங்கோனிமிர்த்தவளையுஞ்சிலிர்க்கவிற
> னந்திமேன்மொழிவையே. (பா-4?)

என்பதினாலும் விளங்குகின்றது.

இந்நந்திவர்ம்மன் சோணாடு, கொங்கு வேங்கடம், தொண்டை முதலிய நாட்டதிபதியென்று இக்கலம்பகம் கூறுகின்றது. அன்றியுமிவ்வரசன் தமிழ்ப்பாஷையில் அபிருசியுடையவனென்னப்பட்டுள்ளான். இவ்வரசன் இராசதானி காஞ்சிபுரம். இதுவன்றி மயிலையும் மல்லை (மைலாப்பூர், மாபலிபுரம்) யும் இவன் இராசதானிகளென்று கூறப்பட்டுள்ளன. இவ்வரசன் பெயரால் ஒரு புலவர் ஒரு கோவை பாடி வெகு பரிசளிக்கப்பெற்றதாய்,

நந்தி.

> தடங்கைப்பூ பாலன்மேற் றண்கோவை பாடி
> யடங்கப்பூபாலரானார். (பா-91)

என்பதினால் தெரியவருகிறது. இக்கலம்பகத்து விஷயமிவ்வாறிருக்க.

சிலாசாஸனங்களில் நந்திவர்ம்மன், நந்திவர்ம்ம மகாராஜா, கோவிஜய நந்திவிக்கிரமவர்ம்மன், நந்திப்போத்தரசர், தெள்ளாற்றெறிந்த நந்திப்போத்தரசர், எனப்பலவாறாய்ப் புகழப்படும் பல்லவசக்கரவர்த்தியொருவனுளான். கலம்பகத்திற் குறிக்கப்பட்டுள்ள அவனி நாரா

யண்ணனென்னும் பெயருமிவனுக்குள்ளதென்பது, இவன் மகன் நிருபதுங்கவர்ம்மன் காலத்ததும் அதற்கும் பிற்பட்டசோழர்கள் காலத்ததுமாகிய சாஸனங்களில், இவன் காலம் வரை காவதிப்பாக்கமென்னு மட்டுமே பெயர் கூவப்பட்டிருந்த காவேரிப்பாக்கமானது, அவனிநாராயணச் சதுர்வேதிமங்கலமாகிய காவதிப்பாக்கமெனப்பெயரடைந்ததால்,ஏற்படும். திருச்சிராப்பள்ளிக்கடுத்த பற்பல விடங்கலிற்காணப்படுஞ் சாசனங்களில் விடேல்விடுகுசதுர்வ்வேதி மங்கலமென்ற ஓர் ஊரைக்குறித்திருக்கிறது. நார்த்தாமலையின் சாஸனத்திலொன்று, நிருபதுங்கவர்ம்மனுட்சியின் ஏழாம் வருஷத்தைச் சேர்ந்தது. அதில் விடேல்விடுகு முத்தரையன் மகனாகிய சாத்தன் பழியிலி என்பவன் அவ்வூரின்மலையிலொரு சிவக்கிரகம் கல்லுவித்தான் என்று கூறுகிறது. சாத்தப்பழியிலி நிருபதுங்கன் காலத்தானயின் இவன் றந்தை, நிருபதுங்கன்தந்தை நந்திவர்ம்மன் காலத்தானதல் வேண்டும். நந்திக்கு விடேல்விடுகென்னும் பெயரிருந்ததென்று, இச்சிற்றரசன் பெயரால் விளங்குகிறது. (நான் எழுதியிருக்கும் பல வியாசங்களிலும், சிற்றரசர், சார்வபௌமச் சக்கரவர்த்திகள் பெயரைத்தரித்துக்கொள்ளல் சகஜமென்று கூறியுள்ளேன். அதற்கு இதுவுமோர் சான்று) இவ்வரசன் தெள்ளாற்றில் போர் வென்றவனென்பது கலம்பகத்துக்கும், சாஸனங்களுக்கும் பொதுவான விஷயமாகையால் இவ்விரண்டும் ஒன்றையொன்று பலப்படுத்துகின்றன. ஆதலால், இவ்வரசனையே "தெள்ளாற்றில் வென்ற" னென்று பெருந்தேவனார் குறித்திருக்கவேண்டும். அப்படியாயின்,

இவ்வரசன் காலமின்னதென்றேற்படவேண்டும். இவ்வரசன் தந்தையாகிய தந்திவர்ம்மனென்பான் இரட்டவம்சத்தானாகிய மூன்றும் கோவிந்தனென்பவனுக்குப் பகைவனாயிருந்து (கி. பி. 804) பிறகு இவ்வரசன் பேரத்தியாகிய (அமோகவர்ஷன் மகள்) சங்கரதேவியைத் தன் மகன் நந்திக்கு மணம் புரிவித்து வைத்தானென்பது சரித்திரசித்தம். ஆகவே, தந்திமகன் நந்தி கி. பி. 804 க்குப் பிற்பட்டவன்; முதல் அமோகவர்ஷன் காலமாகிய கி. பி. 814 - 876 ல் இருந்திருக்கவேண்டும். இவ்வரசன் 62-வருஷ மரசாண்டவன். ஆதலால் இவன்கீழ் வாணவம்சத்தார் மூன்று தலைமுறை யாண்

டார்கள். இவ்வரசன் காலத்தார், கங்கவரசனாகிய முதல் பிருதிவி பதியும், பாண்டியன்வரகுணனுமாவார். இவ்வரசன் மகன் நிருபதுங் கனையெதிர்த்து வந்தபாண்டியன் வரகுணன்மேற்படையெடுத்துத்திருப்புறம் பியத்திற் பொருது உயிர்மாண்டவன் மேற்கூறிய பிருதிவிபதியே. இக்குறித்த விஷயங்களைக் கொண்டு இவ்வரசன் உத்தேசம் கி. பி. 815 முதல் 870-வரை யாண்டவனென்று கொள்ளலாம். இவனுடனெதிர்த்த மன்னனுட் பாண்டியன் வரகுணனொருவனென்று முன்னரே சொன்னோம். சோழர்களில் முதல்ஆதித்தனாகவேண்டும்.

மேற்கூறியவற்றால் பாரதம் பாடிய பெருந்தேவனார் 9ம் நூற்றாண்டின் இரண்டாம் பகுதியைச் சேர்ந்தவரென்னலாம்.

து. அ. கோபிநாதராவ்.

---

# இந்து சாகபட்சகனாய் இருப்பதேன்?

(தொடர்ச்சி.)

—:o:—

இந்துப்பிள்ளைகளும் பெண்களும் பாடசாலைக்குப்போய் முதற் பாடம் தொடங்கும்பொழுது உயர்ந்த நீதிமுறைகள் கற்கின்றார்கள்; அருள் வற்புறும் நூற்பாடங்கள் கற்கின்றார்கள். அவர்கள் வயது முதிர முதிர எல்லாப் பிராணிகளிடத்தும் கருணைபாராட்டுகின்றார்கள். (ஸவ-ூஜ-ஒெதஷ-ஹிம்ஸாஜவ) "பகுத்தறிவில்லாத ஜந்துக்களிடம் அன்புடையனாகு. மனிதனுக்கியற்கையுணவு மாமிசமல்லாததால், உணவின் பொருட்டு இவைகளைக்கொல்லாதே." என்னும் நீதிமுறை அவர்களுக்குப் போதிக்கப்படுகின்றது. "தாமாய்ப் பூமியில் முளைத்து வளரும் செடிகொடி முதலிய தாவரங்களினின்றும் போதுமான சத்துக்கிடைக்கும்பொழுது தனது வயிற்றுக்குழியை நிரப்பி, நாவிற்கு அற்ப உருசியுண்டாக்குவதற்காகப் பிராணிகளைக் கொல்லும் மகாபாதகம் யார்செய்வார்?". என்று ஸம்ஸ்கிருத முதற் பாடப்புத்தகத்திற் படித்திருக்கிறேன். உண்ணப்படும் பிராணியையும் உண்ணுபவனையுமொப்பிட்டுப்பார், உண்பவனுக்குண்

டாகும் சுகம் நொடிப்பொழுதுள்ளது. உண்ணப்படும் பிராணிக்கோ அதனது வாணாண்முழுதும் அநுபவிக்குஞ் சுகமில்லாதுபோகின்றது.

"நமது வயிறு நிரப்பச் சாகபட்சணமே போதுமானதாயிருக்க ("தொக்க விலங்கிற்கும் புள்ளிற்குங் காடே புலன்கெட்ட, புல்லறிவாளர் வயிறு" என்றபடி,) அவ்வயிற்றினுள் இறந்தபிராணிகளையிட்டு அடைக்கின்றோமே" என ஜைன ஞானியார் இக்கருத்தை வைத்தமைத்தே சொல்லியிருக்கின்றார். (மேலேகண்ட நாலடியார் வாக்கியத்தை யிங்குச் சேர்த்துக்கொள்க.)

உணவிற்காகவேனும், வேடிக்கைக்காகவேனும் பிராணிவதை செய்வது எப்படிப்பாவமென்று மேனாட்டார்களுக்குக் கொஞ்சமேனுந் தெரியவில்லை. இதையறிவதற்கு அவர்களது மதம் ஓர் பெரிய இடறுகட்டையாக நிற்கின்றது. திரியக்கு ஜந்துக்களுக்கு ஆத்துமாவில்லையென்றும், மனதில்லையென்றும், உணர்ச்சியில்லையென்றும், மனிதனது உணவின்பொருட்டு அவைகள் படைக்கப்பட்டனவென்றும், சர்வ ஜீவதயாபரக்கடவுள் தமதாகாரத்தின்பொருட்டு உண்டுபண்ணியவைகளைத் தாந்தின்றுவிட்டுக் கைம்மாறாக அவருக்கு முகமன் கூறுவதே தமது கடமையென்றும் அவர்கள் மதம் அவர்களுக்குணர்த்துகின்றது. இந்தக்காரணங்கொண்டே ஈசன் தான்படைத்தபிராணிகளிற் சிலவற்றை மனிதன் கொன்றுதின்றாலல்லது அவன் செய்யுந் தோத்திரங்களுக்கு அவ்வீசன் செவிசாயான்போலுமென வெண்ணிக் கிறிஸ்தவநாடுகளில் தேவாராதனகாலங்களிலும், கிறிஸ்மஸ்ப்பண்டிகைகாலங்களிலும், பல்லாயிரம் பிராணிகளை வதை செய்கின்றார்கள். காய்கறியுணவைக்குறித்து நான் பிரஸ்தாபித்துக் கொண்டிருந்த ஒரு சமயம் அங்கிருந்த லண்டன் நகர்ப்பெரிய பாதிரியாரொருவர் என் நண்பனை நோக்கி "இக்கோட்பாடுகளுக்குச் செவிசாயாதேயும்; பைசாசங்களின் கோட்பாடுகளிவையென நமது வேதங் கூறுகின்றது" என்றார்.

அவர் புது ஏற்பாட்டிலுள்ள ஓரிடத்தைச்சுட்டி அப்படிச் சொன்னார். அஃதாவது:—

*

"ஆகிலும், ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே மனச்சாட்சியிற் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள்....விசுவாசிகளும் சத்யத்தை அறிந்தவர்களும் ஸ்தோத்திரத்தோடே அநுபவிக்கும்படி தேவன் படைத்த போஜன பதார்த்தங்களை விலக்கவும் வேண்டுமென்று அந்தப்பொய்யர் கட்டளையிடுவார்கள். தேவர்படைத்ததெல்லாம் நல்லதாயிருக்கிறது; ஸ்தோத்திரத்தோடே ஏற்றுக்கொள்ளப்படுமாகில் ஒன்றும் தள்ளப்படத்தக்கதல்ல. அது தேவவசனத்தினாலும், ஜெபத்தினாலும் பரிசுத்தமாக்கப்படும்."

(I. தீமோத்தேயு, iv; 1, 3, 4, 5)

இவ்வார்த்தைகளைத் தேவவாக்கென்று நம்பும் ஜனங்கள், உணவின்பொருட்டு ஜீவவதை செய்வது பாவமென எப்படியெண்ணுவார்கள்? இந்த வார்த்தையை நம்பி விசுவசிக்கும் கிறிஸ்தவர்கள், தின்பதற்காகப் பிராணிகளைக்கொல்வதும் பாவமென எண்ணுவது எப்படியரிதோ அப்படியே, சர்வகாருணியமூர்த்தி மனிதன் தின்பதற்காகக் கீழினப்பிராணிகளைப் படைத்தாரென்று இந்துக்கள்நம்புவதும்அரிது. மனிதனுணவிற்காகப் பிராணிகள் படைக்கப்பட்டனவென்றவெண்ணம் முதலில் செம்படவர்களுக்குண்டாகியது. சிம்மாஸநத்துப் பரமண்டலத்தில், ஏதோ ஓரிடத்துட்கார்ந்துகொண்டு, மனிதனுண்பதற்காகப் பிராணிகளையுண்டுபண்ணி அவைகளையுண்ணும்படி அவனுக்குக் கட்டளையிட்டுக்கொண்டிருக்குந் தேவனொருவன் இவ்வுலகை முதற்காரண மெதுவுமின்றிப் படைத்தாரென இந்துக்களுக்கு அவர்கள் மதம் போதியாததால், அந்நற்கோட்பாட்டைக் கேட்க அவர்களுக்குத் தலை நடுக்கமுண்டாகிறது.

வேதாந்தமதம், புத்தமதம், சைனமதமுதலிய பன்முகமுடைய இந்துமதம், மனிதன் அற்பப்பிராணியாயிருந்து அதிலிருந்தும் பெருகினானென்னும் நியாயத்தை அடிப்படியாகவுள்ளது. ஒருவஸ்துவே கல், மண், புற்பூண்டு, பறவை, விலங்கு முதலிய பலவகைத் தோற்றங்கொண்டு விளங்குகின்றதென்றும், எல்லாம் ஆவிர்ப்பாவசக்தியென்றும், ஒரு பெரும் பந்தத்தால் எல்லாம் ஒன்றோடொன்று பிணிக்கப்பட்டுள்ளனவென்றும், ஒவ்வொரு ஜீவனிலும் பரமாணுப்பிண்டம் முதல் மனிதன் வரையில் எல்லாமொன்றோ

டொன்று அளவில் வேற்றுமைப்படுவனவன்றிப் பொருளில் வேற்றுமையில்லையென்றும் அம்மதம் அவர்களுக்குணர்த்துகின்றது. கீழினப்பிராணிகளுக்கு ஆத்துமாவில்லை மனமில்லையென்னுங் கொள்கையை அது அடியோடு மறுக்கின்றது. ஆத்துமாவும் மனமும் ஏககாலத்திலுண்டென்றும் புகட்டுகின்றது. எங்கு ஜீவன் உளதோ அங்கு பிரபுத்தியுண்டென்றும், ஆனால் வெளித்தோற்றத்தின் அளவுமட்டும்வேறுபடுமென்றுஞ் சொல்லுகின்றது. அத்தோற்றம் உலோகவர்க்கங்களில் கேவலம், அற்பம். தாதுவர்க்கத்தில் அதைவிட அதிகம். அதைவிட ஜீவவர்க்கத்திலதிகம். பரமசூட்சுமமான புழுப்பூச்சிக்கும் மனமுண்டு. அதற்கும் வலிதெரிகிறது. அவ்வுணர்ச்சிக்குத் தப்ப வழி தேடுகின்றது. முதிர்ந்த தற்கால சாஸ்திரிகள் அப்படியில்லையென மறுத்தனரில்லை. 'லி காண்டு' (Le Conte) என்னும் புலவர் இக்கருத்தைத் தமது பிரசங்கங்கள் சிலவற்றில் மிகவற்புறுத்திச் சொல்லியிருக்கின்றார்.

இதற்குமேலுள்ள ஜீவவர்க்கப்படியை நாம் பரிசோதிக்கும்பொழுது, மிகப்பருத்து வளர்ந்த உடம்புகளில் இவ்வுணர்ச்சியும், அறிவுமிருப்பது நன்றாகத் தெரிகிறது. போகப்போகத் தனித்தனித்தோற்றமுஞ் சூழ்வுமுள்ள மனித சரீரத்தில் எல்லாவற்றிற்கு மேலாகத், தெரிகின்றது. இப்பிராணிகளொவ்வொன்றிற்குந் தனித்தனியே ஜீவனுமுண்டு: இருப்புமுண்டு: "நான்" என்னு மறிவுமுண்டு: இன்பதுன்பவுணர்ச்சியுமுண்டு: சாவைக்கண்டஞ்சும்: உயிர்வாழமன்றாடும்; இவைகளொவ்வொன்றிலுமுள்ள ஜீவவித்து, ஆவிர்ப்பாவப் பலபடிகளின் வழியே சிறுகச்சிறுகச்சென்று கடைசியாய், மனிதவுருவெடுக்கின்றது. உயிர் நமக்கெப்படி யருமையோ அப்படியே திரியக்கு ஜந்துக்களுக்கும் அருமையென ஆரியர்களது சுருதி முதலியன கூறுகின்றன. நமக்குச்சாக எப்படி மனமில்லையோ, அப்படியே அவைகளுஞ் சாவைக்கண்டு நடுங்கிச் சுருங்குகின்றன. "இன்பம் வேண்டி எந்தப்பிராணியையுங் கொல்லாதே; பிரகிருதியிலுள்ள எல்லாவற்றிலும் பொதுவான உயிருள்ளது; எதுவானாலும் அதற்கனுகூலியாயிரு' என வேதமுறையிடுகின்றது. அதாவது அனாதியான வேதம் மாஹிம்ஸ்யாத்ஸர்வாபூதாநி என்றோலமிடுகின்

றது. அதாவது உண்மையென்றேனும், வேடிக்கை கருதியேனும் எந்தப்பிராணியையுங் கொல்லாதே." என்பதே.

இராமனது சரிதயாகிய இராமாயணமென்னும் மஹாகாவியத்தில், மிருகாதிகளையும் நம்முடன் பிறந்தவர்கள் போலப் பாவிக்கவேண்டுமெனச் சொல்லியிருக்கின்றது. அவைகளால் நாமெய்தக்கூடிய பயன்களும், கவிசாதுரியமாகவும் வருணித்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. இரத்தமாமிச சரீரியாய்ப்பூமியில் ராமனென்னும் மனிதாவதாரமெடுத்துவந்த ஸ்ரீபகவான் இலங்கைக்கரசனை அரக்கனால் எடுத்துச்சென்ற தனதுயிர்க்காதலி சீதாபிராட்டியை மீட்க, அவ்வரக்கமன்னனுடன் போர்செய்தார். நானாஜாதி மிருகங்களே அவருக்குப் பெரும்படையாயின. ஆவிர்ப்பாவப்படியில் மற்றவைகளினுமுயர்ந்து மனிதனுக்கு அடுத்த கீழ்ப்படியிலுள்ள வானரமான அநுமானே அவரது படைத்தலைவன். (ஜாம்பவான் ஆகிய)கரடியே அவருக்குப் பிரதம மந்திரி. மற்ற விலங்குகளே படையாட்களெனவுஞ் சொல்லியிருக்கிறது. மகாநேர்த்தியாக எழுதப்பட்டுள்ள அக்கதையை அடிமுதல் நுனிவரையிற்படிக்கு மெவனும் எந்தப்பிராணியினிடமும் அன்பிலாதிரான்: கொடுமையாயிரான்: என்றால், அவைகளைக் கொல்லானெனச் சொல்லவும் வேண்டுமோ?

ஆரியர்களுக்குள் காய் கறி புண்ணும் பழக்கமுண்டுபண்ணியது புத்தரென்று மேனாட்டோர் எண்ணியிருப்பது தவறு; அது முற்றுந்தவறு. அக்காலத்துள்ள ஆரிய இருடிகளிற் சிலர்மட்டும் அநுஷ்டித்து வந்த கொல்லாவிரதத்தை ஜனங்களெல்லோரும் அநுஷ்டிக்கும்படியாய்ப் புத்தர் உபதேசித்தார். யாகாதிக்கிரியைகளிற் செய்து வந்த பிராணிவதையு முதவாதென வாதித்தார். மாமிசமுண்ண வேண்டுமென்ற எண்ணத்துடன் அப்புரோகிதர்கள் பிராணிவதஞ் செய்யவில்லை. அக்கிரியைகளாற் றேவர்களுக்குத் திருப்தியுண்டாக்கினால், அவர்களது அருளால், சுவர்க்காதிபத்திய முதலிய கிடைக்குமென்றும், சத்துருக்களை வெல்லலாமென்றும் எண்ணியிருந்தார்கள்.

பிழைப்புக் திண்டாட்டமாகும் பொழுது ஒரு பறவை மற்றொன்றைத்தின்பது போலவும், மாமிசபட்சணிகள் மற்றப்பிராணிகளைத்

தின்பது போலவும், ஒன்று மற்றொன்றைத் தின்னவேண்டுவது முறையென்றும், அதனால் நாம் புலாலுண்ணுவது முற்றுஞ்சரியென்றும் சிலர் சொல்லுகின்றார்கள். உலகியலைப்பார்க்கும் பொழுது, இந்நியாயஞ் சரி யென்று சொல்லும்படி தோன்றுகின்றது; ஆனால் இந்த நியாயம் திரியக்கு ஜந்துக்களுக்குமட்டும் பொருந்தும். அந்த நியாயத்தை மிருக நியாயமென்றே சொல்லலாம். அவைகளினும் மேலோரான நமக்கு மேலான விதிகளிருக்கின்றன. மிருகபக்ஷிகளிடம் விளங்காதனவும் மனிதனிடமட்டுமே விளங்குவனவுமான நீதிவிதிகளும், ஆசாரவிதிகளுமிருக்கின்றன. இவ்விதிகளுண்டென நாமொப்புக்கொள்ளாமல் மறுப்போமானால் விலங்குத்தன்மைக்கு மேற்றன்மை ஒருபொழுதுமெய்தோம். ஜீவர்களெல்லாவற்றினும் மனிதன் மேலாய்நிற்பது, விலங்கு பறவைகளுக்குள்ள அதே குணங்கள் அவனிடம் அதிகமாயிருக்கின்றன வென்பதற்காகவல்ல. ஆனால், நீதி லட்சணத்தாலும், தெய்வத்தன்மையறியும் இலட்சணத்தாலும் அந்தஜெந்துக்களை படக்கியாளுந்திறமையிருப்பதினாலேயாம். எவனிடம் நீதி லட்சணமில்லையோ, ஆத்தும லட்சணமில்லையோ, அவன் இழிந்த விலங்கினும் மேலானவனல்லன். மகா இழிந்த ஜந்துக்களுக்கும் கீழிழிந்து செல்லுந்திறமையும், ஆத்துமலட்சணமறியும்படியான மேற்பதவிக்கு உயர்ந்து செல்லும் வல்லமையும், மனிதனொருவனுக்குத்தானுண்டு. அவனது தேவாம்சத்தை அவன் தெளியவெளிக்காட்டலாம். உற்றுணர்வோமானால், சுருக்கிச்சொல்லின் எல்லாநன்மையுமுருக்கொண்டு விளங்குவதுபோல் அவனிருக்கலாம். அதே மனிதன் தான் செல்லுமிடமெங்கும் நாசம், கொலை, கலகம், விலங்கியற்கொடுமை இவைகளுண்டாக்கலாம். அவனே உபகாரம், நன்மை, சாந்தம், அன்பு, அனுக்கிரகம் இவைகளுமுண்டாக்கலாம். அதேசக்தி விலங்கியல்கொண்டு செல்லும்பொழுது சங்காரஞ்செய்யும் பேய்க்குணமாகிறது. உத்தமகுணமும் அன்புங்கொண்டு செல்லும்பொழுது உலகாரஞ்சினியாகிறது.

கசாப்புக்கடைக் கொலைக்காரர்களது மனநிலைத்தாழ்வை யோசித்துப்பார். ஓயாது கொலைத்தொழிலைக் கையாளுவதால், அவர்களது நல்லுணர்ச்சிபோய் வரவரக் கன்னெஞ்சினராய்விடுகிறார்கள்.

ஆதரவற்ற பிராணிகளை எந்தக்கத்தியாற் கொல்லுகின்றார்களோ அதே கத்தியால், தம்மினத்தாராய மனிதர்களது நெஞ்சிற் பாய்ச்சக்கூசார்கள். சிகாகோவிலுள்ள கசாப்புக்கடைகளே பூமியிலுள்ள எல்லாவற்றினும் முதன்மையானவைகள். கொலைத்தொழிற் கென்றே பழகிய சண்டாளர்களாகையால் மாதந்தோறும் பல்லாயிரம் பிராணிகள் வதையுண்கின்றன. கொலையாளிகளிற் பெரும்பான்மையோர் கசாப்புக்கடைக்காரர்களாகவே யிருப்பார்கள். அவர்களது இந்த மனநிலைத்தாழ்விற்கும், அவர்கள் செய்யும் பழிபாவங்களுக்கும் யாரை நாம் குற்றஞ்சாட்டுவது? இறைச்சியுண்பவர்கள் அவ்வுணவினாலாகும் இப்பயனைச் சிறிதேனும் யோசிக்கிறார்களா? இவைகளைக்கேட்க அவர்களுக்கு அங்கங்குலைவதால் அவைகளைக் கேட்கவேணும், நினைக்கவேணும் அவர்களுக்குப்பிரியமில்லை. அக்காட்சிகளைக்காணவும், அவ்வார்த்தைகளைக்கேட்கவும், மனம் பொறாது கண்காதுகளைப் பொத்திக்கொள்ளுகின்றார்கள். உண்மையையாராயின் இறைச்சிதின்பவர்களே இப்பழி பாவங்களுக்கெல்லாம் உத்தரவாதிகள். அக்கொலையாளிகள் செய்யும் எல்லாத்தீச்செயல்களுக்குந் தின்பவர்களும் முக்கிய காரணமாகின்றார்கள். அவர்களது மனத்தாழ்விற்கு மிவர்களே காரணம். இறைச்சியுண்போரில்லையேற் கொலையாளிகளுமில்லை. ("தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும், விலைப்பொருட்டா லூன்றருவா ரில்.") செந்நீர்க்கையுடைய கொலையாளியொருவனை, மெல்லியலொருத்திகண்டால் தலைநடுங்குவாள். ஆனாலும், அவன் கொலைபாதகத்திலும், இழிவிலுந் தனக்குமொரு பங்குண்டென் பதையும் அவள் நினைக்கவேண்டும். தன்னுணவிற்கென்று தன்கையாலொரு பிராணியை வதைப்பாளாயின் அவள்பழி சிறிதுகுறையும். எப்படியெனின், வேறொருவன் தன்பொருட்டுக் கொடியபழிகாரனாகாது அவள் தடுப்பள். கொலையாளிகள், பாவிகள், கொடியர்கள் என்ற வசைச்சொற்கள் எந்நாட்டிலுமுண்டு. இந்தியாவில், மேன்மக்களிருக்குமிடத்துக் கொலையாளிகள் தலைநீட்டக்கூடாது. ஒருவனைக் கொலைகாரன், சண்டாளன் என்றுசொல்லித் திட்டுவதைவிடப் பெருஞ்சாபம், அவனுக்கில்லை. கொலைகாரர்கள் பிராணிகளைக்கொல்வதிலேயே பழகிவருவதால் அவர்களது மனமுங்குணமும், மரத்துப்போயிருக்குமென்றெ

ண்ணியே அத்தொழிலுடையோர் ஜாதிகளாயிருக்க வொண்ணாது என, ஐக்கியநாட்டிற் சில மாகாணங்களில் விதித்திருக்கின்றார்கள். சுவைமிக்க இறைச்சித் துண்டொன்று பந்தியிற் பரிமாறியிருக்கக் காணுமொருவன், கொலைச்சாலையிலிருந்து சமையற்சாலைக்கு இறைச்சி கொண்டுவரப்பட்ட விதத்தைச் சற்று மனதால் நினைப்பானேல், இறைச்சி தின்பவர்களுக்குக் கொஞ்சமாவது இரக்கமிருக்குமாயின், அவர்களில் மூன்றிலிரண்டு பகுதியார் அந்தநிமிஷமே அவ்வுணவைத் தள்ளிப்போடுவாரென்பதிலையமில்லை. எனக்குத்தெரிந்த அமெரிக்க நண்பரொருவர், சிகாகோ கசாப்புக்கடைச்சாலைகளை ஓர்முறை பார்த்து அங்குநடக்குங் கொலை, கொடுமை, பழி, பாதகங்களைக் கண்டு மனநடுங்கி யுருகி, அன்றுமுதல் இறைச்சியுணவை விட்டுவிட்டார். புலாலுண்பவன் எவனும் அப்பழிபாவத்திற்குத் தானுத்தரவாதியில்லை யெனச்சொல்லமுடியாது. உலகோரது மனத்தாழ்விற்கும் மானத்தாழ்விற்குந் தானுமொருபங்காளியாகவே வேண்டும்.

இறைச்சி யுண்பவர்கள் மரக்கறியுணவைக் குறித்துப்பலவித ஆட்சேபஞ் சொல்லுகின்றார்கள். இறைச்சியுண்ணாத முறையில், பிராணிகள் பூமியெல்லாம் பல்கிப்பெருகி விடுமென்கிறார்கள். ஆடு, மாடு, பன்றி, கோழி முதலிய உண்ணப்படும் பிராணிகளைக்குறித்து என்னவாதநியாயஞ்சொல்லுகின்றார்களோ அதேவாதநியாயம் உண்ணப்படாதபிராணிகளாகிய குதிரை, கழுதை, நாய், பூனை, எலி முதலிய பிராணிகளைக் குறித்துஞ்சொல்லலாமே! ஆரியவர்த்தத்தில் ஆரியர்கள் மாக்களைக்கொல்வதில்லை. அப்படியிருந்தும் அவைகள் அளவு மீறிப்பெருகவில்லை. ஆங்கிலேய அரசாட்சி இந்தியாவிற்கு வருவதற்குமுன் இந்தியாவில் கசாப்புக்கடைகளே கிடையா. இப்பொழுதும் சுதேச அரசாங்கத்திற்குட்பட்ட நாடுகளில் காட்டிலுங்கும் பறவைகளையுங்கூடக் கொல்லக்கூடாதென்று கடுமையான சட்டங்கள் உண்டு. ஆனாலும், இந்நாடுகளில் காட்டுப்பிராணிகள் அளவிறந்து பெருகவில்லை. அவைகளால் ஜனங்களுக்கு இம்சையுமில்லை.

பூர்வம் சிகாகோவாசியாகிய "Barrows" என்னும் அமெரிக்கப்புலவர் ஒருவர் (அல்லது வைத்தியர்) சிகாகோவில் அடிமாடுகளாக்கொழுக்கவளர்க்கப்படுமாடுகளைவிட, இளைத்து மெலிந்துள்ள சில

எருதுகளை வாரணாசிநகர்த்தெருக்களிற் கண்டதாகப் புதாஆர்ங்கிஸ் பிரசங்கமொன்றிற் சொன்னார். அவைகளைக்காண அவருக்குத் தண்ணியாய் மனமுருகியது. இப்படி அனாத்தீனிதின்று அல்லது போதுமான தீனியின்றி வாழும் மாடுகளிருப்பதைவிட அவைகளை உணவின்பொருட்டுக்கொல்வது நலமாகுமென்றார். அவரது ஜீவகாருண்ணியக் கோட்பாடு வியக்கத்தக்கதே. நாம், மீன்றின்னுமற்போனாற் கடலெல்லாம் சீக்கிரம் மீன்குளியலாய்விடுமெனவுஞ்சொன்னார். கடல் மீன்கள் குறையவேண்டுமென என்னபாடு பட்டு மீன்களை நாம் வாரிவாரித்தின்னினும், அவைகளது பிறப்பையும், இருப்பையும் சமப்படுத்திக்கொண்டுவர ஈசனாணையில்லாவிடின், நம்பாடெல்லாம் வீண்பாடாகும். ஆனால் இவ்வித விரதங்களும் நியாயங்களும் பேசுவது புலாலுண்ணும் பழக்கமுள்ளவர்களுக்கியல்பே. புலாலுண்ணாவிடின் மனிதன் பலமற்று, வேலைக்குத் தகுதியற்றுத், துணிவுந் தைரியமுமின்றி ஆகிவிடுவானென்பது வேறு சிலரது அபிப்பிராயம். இஃதோர் பெருமதிக்குறைவு. இந்தியப்படையில் சீக்கிய காலாட்படையிருப்பது நீங்களறிவீர்கள். இங்கிலீஷ்ப்படையிலுள் அவர்களைவிட வீரமுள்ளோரில்லை; பலவான்களில்லை; சண்டைக்களத்திலொருபொழுதும் அவர்கள் புறங்காட்டுவதில்லை; கைச்சண்டையில் ஒரு சீக்கியன் இறைச்சிதின்போர் மூவருடன் எதிர்த்து நிற்பான்; ஆனால் இவ்வீரர்கள் இறைச்சியுண்பதில்லை. மீனுண்பதில்லை; மதுபானஞ்செய்வதில்லை; சுருட்டுப்பிடிப்பதில்லை; முற்றுஞ்சாகபட்சகர்கள். ஓட்டு என்னுந் தானியவுணவுண்பதால் நோடிக்கணக்கான ஸ்காட்டுமென்கள் நோயற்றுப் பலமுற்று, வீரமெய்திப் புத்திமான்களாகவும் இருக்கின்றார்கள். ஜர்மனியில, மூமல்லர்களுக்குள் நடந்த பந்தயவோட்டத்தில் அவர்களில் சாகபட்சகனை ஒருவனே மற்றவர்களை வெல்லக்கூடுமெனக் கண்டுகொண்டார்கள். சாகபட்சணத்தால், பொறுமையும், மிருதுவுணவுமுண்டாகும். மூர்க்கத்தனம் படபடப்பு அடிக்கு இக்குணங்களை வீரமென்றும் பலமென்றும் ஜனங்கள் தாறுமாறாக எண்ணுகின்றார்கள். இம்மனிதர்கள், புலி, ஓநாய் இவைகள், குதிரை, எருமை அல்லது யானை இம்மிருகங்களினும் வலியுள்ளவையென்கின்றார்கள். வீரமுள்ளது என்றறிய மூர்க்கத்தனம் வழி யென்கிறார்கள். ஒரு குதிரையை

ஒரு புலி கொல்லக்கூடுமென்பதுண்மையே. ஒருவனது பலத்தை யறிய மூர்க்கக்குணம் பிரதானமென்கிறார்கள். ஆனால், நெடுந்தூரம் ஒரு பெரும்பாரச்சுமையை யிழுத்துச்செல்லும் தசைவலி அப்புலிக்குண்டோ? ஒரு புலி யானையைக் கொல்லக்கூடும். ஆயிரம் பவுண்டு நிறையுள்ள ஒரு பீரங்கியைத் தூக்கும் வல்லமை அதற்குண்டோ? மூர்க்கத்தனம் ஒரு பகுதி. தசைவலி ஒரு பகுதி. இரண்டனுக்குமுள்ள வித்தியாசம் காணிய வேண்டும். வலியுண்டாவது தாதுவர்க்கத்தாலன்றி இரத்தமாமிசத்தாலன்று. தசைவலியுண்டாவது புலாலுண்பதனாலென்போமானால், மனிதர்கள் மாமிசபட்சணிகளது மாமிசத்தை விரும்பாது சாகபட்சணிகளது மாமிசத்தை யேன் விரும்புகிறார்கள்? சாகபட்சண சத்துப்பாகமெல்லாம் மாமிசத்திற் சுருக்கி யடக்கிவைக்கப்பட்டிருக்கிறதெனப் புலாலுண்போர்கள் சொல்லுகிறார்கள். புலாலுண்பதற்கு இஃதோர் காரணமாயின், மாமிசபட்சணிகளான புலி, ஓநாய், கழுகு முதலிய விலங்கு பறவைகளின் மாமிசத்தையே அவர்கள் உண்ணவேண்டும்.

(இன்னும் வரும்.)

ம. ஜகதீச ஐயர்.

---

# நல்லொழுக்கம்.

(௫௩-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

[ஸ்ரீ: இலக்குமணப்போற்றிகள் மொழிபெயர்த்தது.]

ஆனால் ஒரு ஜாதியாருடைய ஒழுக்கமானது ஸ்திரீயினுடைய கல்வியறிவாலும் சீர்திருத்தத்தாலும் உயர்த்தப்படுமென்பது நிச்சயமாயிருக்க, அவள் இனிமையற்ற உலககாரியத்திலும் இராஜதந்திரகாரியத்திலும் புருஷனோடு போட்டிபோடுவதால் ஏதேனும் பயனடையக்கூடியதுண்டாவென்பது சந்தேகத்திலும் சந்தேகம். புருஷர்கள் ஸ்திரீகளுடைய வேலையைச்செய்யமாட்டாமைபோல ஸ்திரீகளும் புருஷர்களுக்கென்று இவ்வுலகத்தில் ஏற்பட்ட வேலையைச் செய்யமுடியாது. ஸ்திரீகள் மற்றவேலைகளில் பிரவேசிக்கும்படி

*

அவர்களுக்குரிய குடும்பகிரககிருத்ய காரியத்தினின்றும் இழுக்கப் பட்டவிடத்து அச்சனசமூகத்திற்கு கெடுதல் உண்டாயிருந்திருக் கின்றது. உள்ளபடியே சென்ற சிலவருஷங்களாய் நிலக்கரிச்சுரங் கத்திலும் பண்டசாலைகளிலும் கம்மியர்சாலைகளிலும் செங்கற்சூளை களிலும் புருஷர்களோடு ஸ்திரீகள் வேலைசெய்வதைத்தடுக்கிறதற்கு ச்சிறந்த பரோபகாரிகள் முயற்சிசெய்து வந்திருக்கின்றார்கள்.

வடதேசத்தில் புருஷர்கள் வீட்டிலிருப்பதும் தாய்மாரும் புத் திரிகளும் வியாபாரஸ்தலங்களில் வேலைசெய்வதும் இன்னும் சாதார ணமாயிருக்கின்றன. அதினால் அநேக விஷயங்களில் குடும்பத்தினு டைய ஒழுங்கும் குடும்ப நடையும் குடும்பத்தின் விதிகளும் முற்றும் மாறுண்டுகிடக்கின்றன. சென்ற அநேக வருஷங்களாக காரியங்க ளின் இந்த ஸ்திதியானது பேரிஸ் நகரத்தில் முதிர்ந்து இருக்கின்ற து. அதைச் சில ஸ்திரீகள் நமக்குள்தானே உண்டாக்க விரும்பு கின்றனர். அங்கே வியாபாரசாலையில் வேலைசெய்து அல்லது கண க்கர்சாலையில் அக்கிராசனம் வகித்து வேலைகளிலே முக்கியமாய்க் க வனத்தைச் செலுத்துகிறார்கள். ஆனால் புருஷர்கள் பெரும் வீதிக ளைச்சுற்றி சுகசஞ்சாரஞ் செய்கின்றனர். ஆனால் அதன் பயனானது வீடு இழந்து இழிவடைந்து குடும்பமும் அச்சனசமூகமும் அழிந்து போயிருப்பதுதான்.

ஸ்திரீகளுக்கு இராஜ்ய அதிகாரம் கொடுப்பதால் அவர்களுக்கு உயர்வும் தேர்ச்சியும் கிடைக்கும் என்று நம்புவதற்கு நியாயமின்று. ஆகிலும் தற்காலம் ஸ்திரீகளுக்கு அரசாங்க உரிமை எய்துவதால் அளவற்ற நன்மையுண்டாமென்று நம்புவர் அநேகருளர். இந்த சங்கையைத்தீர்ப்பதற்கு அவசியமும் சந்தர்ப்பமும் இஃதன்று. ஆனால் ஸ்திரீகள், ஆண்மக்களையாவது பெண்மக்களையாவது இவ்வுல ககாரியத்தில் அவரவருக்குரிய வேலையில் கிரகத்தில்வைத்துப்பழக் குவதால் செலுத்துகிற அதிகாரமானது, அவர்களுக்கு ராஜ்யதந்திர அதிகாரமில்லாத தன்மைக்குஈடாக, எத்தனையோமடங்கு மிஞ்சிய பயன்தருவதென்று சொல்வது அமையும். மனிதன் ஸ்திரீகளிடத் திலிருந்து அதிகாரத்தைத் திருத்திக்கொள்ள விரும்பினாலும் முடியா தென்றும், ஏனென்றால் அவன் அடக்கியாளுகிற சக்தியானது அவ

பினாலிருந்தபோதிலும், ஏகராஜ்யாதிபதியின் முழு அதிகாரத்தைக்கொண்டு ஆண்டாற்போல் இவ்வுலகத்தை முன்னமே ஆண்டுவருகிறாளென்றும் "ரேடிக்கல் பெந்தாம்" சொல்லியிருக்கிறார். ஸ்திரீகள் சகலமானமனுஷஜாதியினுடைய ஒழுக்கத்தையும் உருப்படுத்துவதானது பார்லிமெண்டு சபைக்கு அல்லது சட்டநிரூபணசபைக்கு அவர்கள் மெம்பர்களைக்கோருவதில் செலுத்த எதிர்பார்க்கத்தக்க அதிகாரத்தைப்பார்க்கிலும் மிகவும் மேலானதென்பது நிச்சயம்.

ஆகிலும் உண்மையாய்ச்சீர்திருத்தஞ்செய்யும் சகலமான ஸ்திரீகளும் உண்மையுடன் கவனம் செலுத்தவேண்டியதும் இதுவரை முகாந்தரமின்றி அலக்ஷியம் செய்யப்பட்டிருப்பதுமாகிய, ஸ்திரீகளுக்குரிய விசேஷவேலையொன்றுளது. அது என்னெனின், மனுஷர்க்குரிய ஆகாரத்தை நல்லமாதிரியில் சுருக்கச்செலவுடன் பக்குவம் செய்வதேயாம். பாகஞ்செய்வதின் மிகச்சாதாரணமான ஞானமின்மையால் தற்காலம் அதில் வியர்த்தமாவதைப்பற்றி நிந்திக்கவேண்டியதாயிருக்கிறது. ஒரே நெல்வளருகிறவிடத்து இரண்டுவளரும்படியாகச்செய்கிற மனுஷன் தன்ஜாதிக்கு உபகாரியாகமதிக்கப்படும் விஷயத்தில், அவனுடைய சாமர்த்தியத்தாலும் உழைப்பாலும் உண்டாக்கிய விளைவுகளை நல்லவிதமானமாதிரியில் திருத்திச்சுருக்கமான செலவில் பக்குவஞ்செய்கிற ஸ்திரீயானவளும் வெகுஜன உபகாரியாகமதிக்கப்படுவாள். அப்படியே தற்காலமுள்ள சாமான்களை விசேஷதிருத்தத்துடன் உபயோகத்துக்குக்கொண்டு வருதலானது சுகத்தையும் செலவுச் சுருக்கத்தையும் குடும்பசௌக்கியத்தையும் வளர்ப்பது மட்டோ, நம்முடைய தேசத்தின் விளைநிலங்களை அதிக விசாலப்படுத்தின பயனுக்கு நிகராகும். நம்முடைய ஸ்திரீகள் தங்களுடைய சாமர்த்தியத்தை இம்மார்க்கத்தில் பயனுடன் செலுத்திச்சீர்ப்படுத்துவரேல் அவர்களுக்குச்சகல குடும்பத்தாருடைய நன்றியறிவும் லபித்து அனுபவசித்தமான பெரிய பரோபகாரிகளாகமதிக்கப்படுவர்.

உ-வது அதிகாரம் முற்றிற்று.

## மூன்றும் அதிகாரம்.

# இணக்கமும் நிதர்சனமும்.

———:o:———

"நல்லாரோடு இணங்கு, நீ அவர்களில் ஒருவன் ஆவாய்"—ஜார்ஜ்ஹெர்பர்ட்.

"என்மட்டுக்கு, நான் கௌரவமான புருஷர்கள் மூலம் கற்பதில் சந்தோஷமுடையவனாவேன்"—ஷேக்ஸ்பியர். "நிதர்சனங்கள் கண்ணிற்கு போதிக்கின்றன. ஆகையால் உங்களுடைய முடிவைப் பற்றி கவனியாதீர்; ஆனால் உங்கள் நாளை எவ்வாறு போக்குகிறீர் என்பதைக் கவனியுங்கள்"—ஷேக்ஸ்பியர்.

"சித்திரவேலையிற் கைதேற விரும்புகிறவன் மிக நேர்த்தியான படங்களைப்பார்த்துவரையவும், அவன்முன்னர்க்காணப்படுகிற நல்ல மாதிரிகளைக் கண்டு தன் சித்திரக்கோலால் ஒவ்வொரு அடையாளத்தையும் தீட்டவும் நிச்சயங்கொண்டவனாயிருப்பன்; அவ்வாறே, தன் ஒழுக்கத்தின் நீதிகள் நல்லனவாக இருக்க விரும்புகிறவன், தனக்கு நல்ல நிதர்சனங்களைக் கோரிக்கொள்வதில் ஜாக்கிரதையாயிருப்பன். அவற்றிற்குச் சமானமாகிற அளவும் அல்லது அவற்றை மிஞ்சுகிறவரைக்கும், ஒருபோதும் சும்மா இரான்."—ஒவன்பெல்தாம்.

வீட்டில் வைத்துண்டாகிற இயற்கையான சிக்ஷையானது வாழ்நாளில் வெகுதூரம் நீடிக்கின்றது; மெய்யாகவே அது ஒருக்காலும் முற்றும் ஒழிந்துவிடுகிறதில்லை. வயது ஆக ஆக, ஒழுக்கத்தை உருப்படுத்துவதில் பிரயோகித்த வீட்டின் ஏகசக்ராதிபத்யமானது நிலைக்கத்தக்க சமயம் உண்டாகிறது. அப்பால் கல்விச்சாலையினின்னும் சிநேகிதர் தோழர்களுடைய இணக்கத்தால் எழுகிற, பெரிதும் செயற்கையான சிக்ஷையானது தொடுத்துக்கொள்ளுகின்றது. அது திருஷ்டாந்தத்தின் வலிமைபெற்ற சக்தியால் ஒழுக்கத்தை உருப்படுத்தா நின்றது.

இளைஞரும் முதியோரும்—ஆனால் அவருள்ளும் விசேடமாய் முதியோரினும் இளைஞர்கள்—தாங்கள் கூடுகிறவர்களைக் கண்ட பா

வனை செய்யாமல் இரார்கள். ஜார்ஜ் ஹெர்பர்ட்டின் மாதா தன் புத்திரரை நடத்துவதற்கு வேண்டிக்கற்பித்த வாக்கியம் வருமாறு :—
“ நமது சரீரங்கள் நாம் புஜிக்கிற இரைச்சிக்குத்தக்க வண்ணம் விருத்தியடைகிறதுபோல, நம் ஆன்மாவும், நல்ல அல்லது கெட்டசங்கத்தின் ஒழுக்கம் அல்லது சம்பாஷணையால் யோக்கியதை அல்லது அயோக்கியதையைத் தன்னறியாதே கிரஹித்துக் கொள்ளுகின்றது.”

உள்ளவாறே நம்மைச்சூழ்ந்தவர்களின் உறவானது, ஒழுக்கத்தை உண்டாக்குவதில் பலத்தபயனை உறுவியாமற்போகாது. ஏனெனின், மனிதர் இயல்பாகவே கண்டபாவனை செய்பவர். சகலமனிதர்களும் தங்கள் கூட்டாளிகளின் பேச்சு, நடை, உடை, பாவனைகளாலும் ஆலோசனைகளாலுங்கூட ஏறக்குறைய அழுந்தப்பெற்றவராகின்றனர். நிதர்சனமானது பயனற்றதா? சகலமும் அதுதான். “நிதர்சனமானது மனிதருக்குக் கல்விச்சாலையாகின்றது. அவர்கள் வேறொன்றிலும் கற்றுக்கொள்ளார்” என்று பர்க் கூறினர். ‘ராக்கிங்ஹாம் மார்க்குவிஸ்’க்காக அவர் எழுதிய கௌரவமானநீதிமொழியாவது; “ஞாபகப்படுத்து; அனுகரணம் செய்; உலைவின்றி முயலு” என்பதேயாம்.

கண்டு-பாவிக்கலானது அதன் பயன் கவனிக்கத்தகாதவாறு பெரும்பாலும் தன்னறியாமே சம்பவிக்கின்றது. ஆனால் அதுகாரணம் பற்றி அதன் பயன் நிலைபெற்றதென்பதில்லை. அழுந்தச் செய்யும் இயல்புடையோர், அழுந்தப்பெறுவார் இயல்பினர்பால் உற்றால் மாத்திரம், ஒழுக்கத்தின் மாறுதலானது தெரியக்கூடியதாகின்றது. மிகவும் துர்ப்பலமான சுபாவமுள்ளோருங்கூட, தங்களைச் சூழ்ந்தவர்களிடம் கொஞ்சம் பலனை உண்டாக்குகிறார்கள். உணர்ச்சி, ஆலோசனை, வழக்கம், இவற்றின் தொடர்பானது நிலைத்ததாயும், நிதர்சனத்தின் செய்கையானது, ஒழிவிலதாயும் இருக்கின்றன.

விருத்தரான நாயகநாயகிகள் அல்லது சில வருடங்கள் ஒரு வீட்டில் கூடி வசித்திருப்பவர்களுங்கூட நாளடைவில் ஒருவரைப் போலொருவர், ஒத்த சுபாவமுடையவராகின்றனர். ஆகையால் அவர்கள் போதுமானபடி நெடுங்காலம் வசிக்கிறதானால், அவர்களை

ப்பிரித்து அறியமுடியாது. விருத்தாப்பியர்கள் விஷயத்திலேயே இவ்வாறாயின், அதிக மிருதுவும், அழுந்தப்பெறத்தக்கதும், தங்களைச் சுற்றிலுமுள்ளவர்களுடைய நடப்புச்சம்பாஷணையின் லக்ஷணத்தைக்கொள்ளத்தக்கதுமான குழைவுள்ள சுபாவத்தையுடைய இளைஞர் விஷயத்தில் அது எவ்வளவு விசேடமான பொருத்தமுடையது என்று எமர்சன் சொல்லியிருக்கிறார்.

“கல்விகற்பித்தலைப்பற்றி மிகுதியும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் சர்வவியாபகமாயுள்ள நிதர்சனத்தைப்பற்றிக் கவனியாததாகத் தோற்றுகிறது. என்னுடைய சகோதரர்களால் காட்டிய நிதர்சனமானது எனக்கு விசேஷமான கல்வியாயிருந்தது. என்னுடைய குடும்பத்தாரிடமெல்லாம் உண்மையான சுவாதீனமாகிய தற்சார்பான குணமிருந்தது. அதைப்பார்த்து நான் அக்குணத்தை அடைந்தேன்” என்று ஸர் சார்லஸ் பெல் என்பவர் தம்முடைய கடிதங்களுள் ஒன்றிற் கண்டிருக்கின்றனர்.

ஒழுக்கத்தை உருவமாக்குதற்குரிய சந்தர்ப்பங்கள் வயசு வளருகிறகாலத்திலேயோ முக்யமாய் சம்பவித்தல் வேண்டுவது இயல்பு. வயசாகவே நிதர்சனமும் கண்ட பாவனையும் ஆசாரமாக ஏற்பட்டு வரவர சுபாவத்திற் கலந்து விடுகின்றது. நாம் அதனை யறியுமுன்னமே நம்மை அது வசப்படுத்தும்படியான அவ்வளவு சக்தியுடையதாயிருக்கின்றது.

ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு பையன் ஒரு புத்திஹீனமானவிளையாட்டு விளையாடினதற்கு பிளேட்டோ என்பவர் அவனைக்கண்டித்தது வருமாறு:—“மிகவும் அற்பமானகாரியத்திற்காக நீர் என்னைக்கண்டிக்கிறீர்” என்று அந்தப்பையன் சொன்னான். “ஆனால் வழக்கமானது சிறியபொருள் அன்று” என பிளேட்டோ மறுமொழி தந்தனர். சுபாவத்துடன் கலந்த கெட்டவழக்கமானது, மனிதர் தாங்களே நிந்திக்கிறதுன்மார்க்கங்களைத் தாங்களே பற்றிக்கொண்டிருக்கும்படியான அவ்வளவு கொடுமையுடையதாயிருக்கின்றது. அவர்கள் வழக்கத்திற் பராதீனப்பட்டு அவற்றின் சக்தியை மீறத் திராணியற்றவராகின்றனர். இதனால் வழக்கமென்னும் ராஜ்யத்துடன் போராடத்தகுதியுள்ள மனவூக்கத்தை உண்டாக்கிவைத்து

க்கோடலானது சன்மார்க்கசிக்ஷையின் ஓர் முக்யபாகமாக மதிக்கப்படும் என்று லாக் என்பவர் கூறியிருக்கின்றனர்.

திருஷ்டாந்ததரிசனத்தால் உண்டாம் ஒழுக்கத்தின் பயிற்சியானது பெரும்பான்மையும் தானே தன்னறியாமல் எழுந்த போதிலும், இளைஞர்கள் தம்மைச்சூழ்ந்தவர்களை அமைதியுடன் பின்பற்றவாவது பார்த்துப் பழகவாவது செய்தே தீரவேண்டுமென்பது அவசியமின்று. தங்கள் கூட்டாளிகளின் நடக்கையைவிட வெகுதூரம் தங்கள் சொந்த நடக்கையானது, தம் வாழ்நாளின் நோக்கத்தைக் குறித்துக்கொள்ளவும் ஒழுக்கத்தை உருவாக்கிக்கொள்ளவும் இடந்தருகின்றது. ஒவ்வொருவனும் தன்னிடத்தில் மனோசக்தியும் சுவாதீன காரியசக்தியும் உடைத்தாயிருக்கின்றான். அதைத் தைரியத்துடன் பழக்கினால் தனக்குத்தானே இஷ்டர்களையும் தோழர்களையும் தெரிந்தெடுக்கும் திறமை உண்டாகும். இளைஞரும், முதியோரும் பலத்தமனக்கொள்கையின்மையினாலேதான், தங்கள் மனப்போக்கிலே போகின்றனர்; அல்லது மற்றவர்களைப்பார்த்து நடந்துகொள்ளும்படியான இழிவை எய்துகின்றனர்.

மனிதர் தாம் சார்ந்த இனத்தாரால் அறியப்படுகின்றனர் என்பது சாதாரணமான வாக்கியமாயிருக்கிறது. குடியில்லாதவர் குடிகாரருடனாவது, நாகரீகமுற்றவர் நாகரீகமற்றவருடனாவது, சன்மார்க்கர் துன்மார்க்கருடனாவது கூடுவது இயற்கையன்று. கெட்ட மனிதர்களுடன் சேர்வதானது இழிவான குணத்தையும் துன்மார்க்கமான மனோசுபாவத்தையும் காட்டுகின்றது. அவர்களுடைய கூட்டத்திற்கு அடிக்கடி போவதானது நல்லொழுக்கத்திற்கு நிச்சயமான குறைவை உண்டாக்குகின்றது. அவர்களுடன் பேசுதலானது மிகவும் கெடுதல் உண்டாக்கத்தக்கது. ஏனெனின், உடன்கையில் தீங்கைச் செய்யவில்லையானாலும் அது மனசில் அவ்விதை போட்டு, நாம்பேசி நீங்கியபின், நம்மைத்தொடர்ந்து வருகின்றது. நிச்சயமாகவே மறுபிறப்பில் உண்டாகத்தக்க ஒட்டுவியாதியாகின்றது.

இளைஞர்கள் தங்கள் விவேகஞானசக்தியால் நடத்தப்பட்டுத் தங்கள் மனச்சான்றிற்கேற்பத் தங்களுக்குரியசுவாதீன மனோசக்தி

யைப் பிரயோகிப்பரேல், அவர்கள் தங்களைவிட நல்லவர்களுடைய கூட்டத்தை விரும்பி, அவர்களுடைய நடக்கையைப்பார்த்து நடக்க யத்தனப்படுகின்றனர். நல்லவர்களுடைய இணக்கத்தால் விருத்தியடையத்தக்க சுபாவங்களுக்கு நலம் சான்ற புஷ்டிவாய்க்கும். ஆனால் கெட்டவர்களுடைய இணக்கமானது தீங்காகவேமுடியும். கார்கேண்டியூய்,உடைய படிப்பைப்பற்றி,ரேபிலேஸ்சொல்லுகிறபடி நாம் அறிகிற சில மனிதர்களை நேசித்து, கனப்படுத்தி, புகழவேண்டியதுண்டு. பின்னும் சிலரைவிலக்கி இகழவேண்டியதும் உண்டு. சிறந்த ஒழுக்கமுடையோருடன் வசித்தால், நீ சிறந்தவனாகவும் அவர்களிடத்தில் பிரகாசத்தைப் பெற்றவனாகவும் உன்னை அறிவாய். ஸ்பேனிஸ் பழமொழிப்படி "ஓநாயுடன் நீ வசித்தால் ஊளையிடத்தான் நீ படிப்பாய்."

சாதாரணமாயுள்ள தன்காரியக் குட்டிகளுடன் சம்பாஷணை செய்வதுகூட மிகவும் கெடுதலாய்ப் பலிக்கும். ஏனெனில் உண்மையான ஆண்தன்மைக்கும் மனவிதியாகிய ஒழுக்கத்திற்கும் ஏறக்குறைய விரோதமாய், கொடூரமும், மந்தமும், அசம்பாவமும், தன்னயம் பாராட்டலுமாகிய மனசுபாவத்தைக் கொடுக்கின்றது. மனம் ஒடுங்கியதால் வழிஓடச் சீக்கிரம் பழகுகின்றது. தயாகுணமானது இறுகிச்சுருங்கிவிடுகின்றது. நீதி சுபாவமானது துர்ப்பலப்பட்டு, தீர்மானமின்றி வந்ததற்கெல்லாம் இடங்கொடுக்கின்றது. ஆகவே, உதாரம் பொருந்திய கௌரவம் அல்லது உண்மையான நற்குணம் அனைத்திற்கும் கேடுவிளைகின்றது.

ஆனால் நம்மைவிட அதிக புத்தியும், நன்மையும், அனுபவமுமுள்ளவர்களுடன் கூடினால் ஏறக்குறைய மன ஊக்கமும் தைரியமும் எப்போதும் உண்டாம். நம் வாழ்நாளைப்பற்றிய ஞானத்தை நமக்கு அவர்கள் அதிகப்படுத்துகிறார்கள். நம்முடைய யோக்கியதையின் மதிப்பை அவர்களால் திருத்திக்கொண்டு அவர்களுடைய ஞானத்திற்கு நாமும் பாகஸ்தராகின்றோம். அவர்களுடைய கண்ணைக்கொண்டு விஷயங்களை நாம் விசேஷமாய் அறிகிறோம். அவர்களுடைய அனுபவத்தைக் கொண்டு லாபம் அடைகிறோம். அவர்கள் அனுபவித்த சுகத்திலிருந்து மட்டுமன்று, அதனினும் அதிகமாய், அவர்

கள்பட்ட கஷ்டங்களினின்றும் அறிவை யடைகிறோம். நம்மினும் அவர்கள் அதிக பலசாலியானால் அவர்களுடைய பலத்தில் நாமும் பாகமடைகிறோம். ஆதலால் புத்தியும், பலமும் உள்ளவர்களுடன் கூடுதலானது ஒழுக்கத்தை உருப்படுத்துவதில் மிகவும் மதிக்கத்தக்க பயனை அடைவிக்க ஒருக்காலும் தவறமாட்டாது. அது நம்முடைய சாதனங்களை அதிகப்படுத்தி, நம் தீர்மானங்களைப் பலப்படுத்தி, நம் நோக்கங்களை மேன்மைப்படுத்தி, நம்சொந்தக்காரியங்களில் மிக்க சாமர்த்தியத்தையும், திறமையையும், பிறர்காரியங்களில் பயனுள்ள உபகாரத்தையும் செலுத்தும்படிக்கான சக்தியைக் கொடுக்கின்றது.

"என் குழந்தைப்பருவத்தில் நான் தனித்திருந்ததால் உண்டாயிருக்கிற மிகுந்த நஷ்டத்தைப்பற்றி எனக்குள்ளே அடிக்கடி மிகவும் துக்கப்பட்டிருக்கிறேன். கல்வி கேள்வியில்லாத நம் சொந்த அறிவைவிட மிகவும் கெட்ட துணை நமக்கு வேறு வேண்டுவதில்லை. தனிமையாயிருப்பதால் தன் இனத்தாருக்கு உதவிசெய்யும் மார்க்கத்தை முற்றும் அறியாதவனாகிறதுமட்டுமன்று; பிறருடையஉதவி தனக்குவேண்டியகுறைகளைக் காணக்கூடாமலுமிருக்கிறான். தனித்திருக்கச் சாவகாசமின்றெனதவாறு, பிறருடன் கூடுதலானது ஓர் மனுஷனுக்குப் பெருகியவளமுள்ள அனுபவஞானத்தை மென்மேலுந் தருவதாக மதிக்கப்படும். இவ்வாறு கிரஹித்த சிநேகமானது அறத்தைப்போலாது வெளியே உண்டானபோதிலும் வளமான பலனைத் திரும்பத் தனக்குக்கொண்டுவராமற் போகாது. மற்றவர்களுடன் கூடுவதால் ஒழுக்கம் பலப்படுகின்றது. நம்முடைய பிரதான நோக்கத்திற்குக் கெடுதலின்றி நம் மார்க்கத்தை விவேகத்துடன் நன்கு கண்டுணர்ந்துகொள்ளச் சக்தி உண்டாகிறது" என்று ஸ்சிம்மெல் பென்னிக் என்பவர் சொல்லுகிறார்.

(இன்னும் வரும்.)

# பல்லவ சக்கரவர்த்திகள்.

முன்றொடர்ச்சி.

கி. பி.

489. பாடமியன் மலைச்சாதனமொன்றில் அரசியற்றலைவன் பல்லவனென்று குறித்துளது.

சளுக்கியவேந்தன் புளகேஷியின் பட்டயம்.

பல்லவரின் கோட்டை பாடமிச்சளுக்கியரால் கவரப்பட்டது.

சளுக்கிய வேந்தரில் முதல்வன் புளகேசி காஞ்சிபுரத்தைச் சுட்டெரித்தான்.

500—600. இராஜேந்திரவர்மன். இவன் புதல்வன் தேவேந்திரவர்மன்.

விஷ்ணுசிம்மன் அல்லது நரசிம்மவர்மன், சண்டதண்டன், அத்திரணசண்டன் இவர்களின் ஆளுகை.

பல்லவர் வேங்கைதேசம் ஆண்டார்கள்.

பிருகேசபல்லவன் பலாசிக்காவில் ஜினதேவாலயம் ஒன்றுகட்டுவித்தான்.

550. விளந்தகங்கன் பல்லவேந்திர நரபதியை ஜெயித்து அவனை யானையிடறிக்கொல்வித்தான்.

570. தேவேந்திரவர்மனின் பட்டயம்.

585. சளுக்கியவேந்தன் புலிகேசி II (610—634).

(குறிப்பு:—மேலேகண்ட புளகேஷி- புளகேசி, புலிகேசியென்றிருக்கலாம்).

589—636. கங்காகர்ளுடன் கொங்கணிவர்மன் III திராவிடதேசத்தை ஜெயித்தான்.

600. சளுக்கியவேந்தன் விக்ரமாதித்தன் I காஞ்சியரசனை முடியை அடியில்வைக்கச்செய்தான்.

600—700. கலிங்கதேசத்தில் பல்லவ அரசாட்சி.

பல்லவரால் சளுக்கிய வேந்தன் அபஜெயமடைந்தான்.

கங்காகர்ளுடன் சண்டமீதவன் காஞ்சிதேசத்தில் திராவிட அரசனை ஜெயித்துத் திறையளிக்கச் செய்தான்.

608. சளுக்கியவேந்தன் விக்ரமாதித்யன் காஞ்சித்தலைவனானான்.

610. சளுக்கியவேந்தன் குப்தவிஷ்ணுவர்தனன் வேங்கைப் பல்லவரை ஜெயித்தான்.

கி. பி.

சளுக்கியவேந்தன் விக்ரமாதித்யன் பல்லவவம்சத்தைத் தன்கீழ் அடக்கினான்.

மேலைச்சளுக்கிய வேந்தன் சத்யாசிரயன் பல்லவரையழித்து காஞ்சிமதிளுக்குள் ஓட்டினான்.

620. விளந்தராஜா கங்காவால் நரசிம்ம போத்தவர்மன் அபஜெயமடைந்தான்.

634. சளுக்கியவேந்தன் புலிகேசி II, பல்லவ அரசன் சண்டதண்டன் II—இவர்கள்சமாதானம்.

635. பல்லவர் காஞ்சியில் அரசாட்சி.

640. பல்லவர் கடம்பரால் தோற்கடிக்கப்பட்டார்கள்.

அத்திரணசண்ட பல்லவன் ஆளுகை.

650—670. காஞ்சிபுரத்தில் சங்கராசாரியர் தம்மதத்தை உபதேசித்தார்.

658—681. சளுக்கிய வேந்தன் விக்ரமாதித்யன் I பல்லவரை வென்று காஞ்சிபுரத்தைக் கைக்கொண்டான்.

658. மேற்படியரசன் இளவரசனா யிருக்கும்பொழுதே பல்லவரை ஜெயித்தான்.

660. மேற்படியரசன் ஜெயத்தேஷ்வரபோத்தராஜனைஜெயித்தான்.

668. கடம்பன் இரவிவர்மன் காஞ்சித்தலைவன் சண்டதண்டனை முற்றும்வென்றான்.

670. சளுக்கியரின் அரசைப் பல்லவர் அழித்தல்.

675. சளுக்கிய வேந்தன் விக்ரமாதித்யன் பல்லவரைவென்றான்.

677. பல்லவர் மீட்டும் ஜெயித்தல்.

679. சளுக்கியவரசன் விக்ரமாதித்யன் பல்லவரையழித்துக் காஞ்சியைக்கொண்டான்.

679. சளுக்கிய விநயாதித்யன் தன் தகப்பனுக்காகப் பல்லவரை வென்றான்.

692. மேற்படியான் காஞ்சியரசன் திரைராயன் சேனையைக் கைப்பற்றினான்.

700—800. கொங்குகர்ணுடன் ஸ்ரீ வல்லபை பல்லவரசன் நரசிம்மபோத்தவர்மனை வென்று மரியும்படிசெய்தான்.

அந்நாள்முதல் பல்லவர் மைசூர்தேசத்தின்கீழ்ப்பாகத்தை யாண்டுவந்தார்கள்.

705. சளுக்கியன் விநயாதித்யன் துவேராயனின் சேனையையழித்தான்.

கி. பி.

725. வடமைசூரிலுள்ள சிர்கண்டாவின் அரசன் மாருவர்மராஜன் பல்லவ அரசகுமாரத்தியை மணந்தனன்.

725—755. இராஷ்டிரக்கூட்டன் தந்திதுர்கன் காஞ்சியைத்தன்னாட்சிக்குள்ளாக்கினான்.

(குறிப்பு:—இராஜபுத்திர ஜாதியினவொன்று சொல்லப்படுகிற இராட்டர் அல்லது இராட்டவர் (Rathor or Rathaur) யாதவகுலத்தினவொன்றும் இரட்டர் எனமருவி வடமொழியில் இராஷ்டிரிக்கா அல்லது இராஷ்டிரக்கூட்டர்வெனத் திரிந்ததாகவும் தெரிகிறது.)

725—755. கர்ணாடதேசச் சேனை காஞ்சித்தலைவன் சேனையை ஜெயிக்க மிக்க வல்லமையுள்ளது.

733. சளுக்கியவேந்தன் விக்ரமாதித்யன் II காஞ்சியரசனை வென்றான்.

மேற்படியரசன் பல்லவநந்தி போத்தவர்மன் I ஐ வென்றுகொன்றான்.

750. கொளம்பாதி ராஜனின் (பல்லவன்) சிலாசாஸனம்.

755. காஞ்சியரசன் ஸ்ரீஹர்ஷனை ஜெயித்ததாகப் பேர்படைத்த கர்ணாடக சேனையை இராஷ்டிரகூட்டன் தந்திதுர்க்கன் ஜெயித்தான்.

தந்திவர்மன் காஞ்சியரசனைவென்று அவன்சேனைமுறிந்து கலைந்தோடச்செய்தான்.

அதற்குப்பின் இருமுறை பல்லவரைவென்று காஞ்சியைக் கைக்கொண்டான்.

வீரமஹேந்திர பல்லவன் ஆளுகை.

758. சளுக்கிய வேந்தன் கிருத்திவர்மன் II பல்லவ அரசன் நந்திபோத்தவர்மனை (II) வென்று காஞ்சியைக் கைப்பற்றினான்.

768. கொளம்பராஜன் (பல்லவன்) அஹவமுக்கன் அல்லது அஹிதர்ஜனனன் ஆளுகை.

770. இராஷ்டிரகூட்டன் துருவன் பல்லவர் பெருமையை மிகவுந் தாழ்த்தினான்.

777. பல்லவ அரச குமாரத்தி குண்டவி ஸ்ரீபுரத்தின் வடபாகத்தில் ஒரு ஜினமந்தவாலயம் கட்டுவித்தான்.

778. இராஷ்டிரகூட்டன் துருவன் காஞ்சியரசன் நந்தியை வென்றான்.

இ. பி.

788. ஹேமசிதலவனால் புத்தர்கள் காஞ்சியினின்று முழுதுந் துரத்தப்பட்டார்கள்.

ஹேமசிதலன் அல்லது ஹேமசீதலன், அல்லது ஏமசிதலன் அல்லது ஹேமசிலன் அநேகம்ஜினரைத் தருவித்து காஞ்சியின் வடபாரிசத்திற் குடியேற்றினான். இவனே காஞ்சி புத்தவரசரிற் கடைப்பட்டவன்.

ஜினாகமங் கைக்கொண்டான்.

700—900. சிம்மவிஷ்ணு, மஹேந்திரவர்மன் I, நரசிம்மவர்மன் I, மஹேந்திரவர்மன் II, பரமேசுவரவர்மன், நரசிம்மவர்மன் II, நந்திவர்மன்.

பல்லவமல்ல நந்திவர்மன் இவர்கள் ஆளுகை.

சிம்மவர்மன் I, சிம்மவிஷ்ணு, நந்திவர்மன், சிம்மவர்மன் II, அர்க்கவர்மன், உக்ரவர்மன், மஹேந்திரவர்மன் இவர்கள் நாமங்கள் அமராவதி சிலாசாசனத்திற் குறிக்கப்பட்டுள்ளன.

800—900. பல்லவமல்ல நந்திவர்மனின் பட்டயம்.

சபரரின் அரசனான உதயனனுடன் மேற்படியான் யுத்தம்.

உய்சலரின் அரசனான பிருத்வி வியாக்ரனுடன் மேற்படியான் யுத்தம்.

பாண்டியவரசனுடன் மேற்படியான் யுத்தம்.

803. காஞ்சியரசன் தந்திகன் இராஷ்டிரகூட்டன் கோவிந்தன் III ஆல் வெல்லப்பட்டான்.

814—819. கொங்குநாட்டன் கன்னதேவன் பல்லவவரசனை வென்று அவனுடன்பின் சமாதானமானான்.

830. நொளம்ப இறைவன் (பல்லவன்) ஆளுகை.

850. மேற்படியான் பட்டயம்.

894. வீரகொளம்பன் அல்லது வீரமஹேந்திர பல்லவன் சாதனம்.

898. வீரகொளம்பன் ஆளுகை.

00—1000. பல்லவ அரசர் ஜெயவர்மதேவன், அவன் குமாரனான ஆநந்தவர்மதேவன் அவன் குமாரன் இராஜேந்திரவர்மதேவன் இவர்கள் கலிங்கதேசத்தில் ஆட்சிசெய்தார்கள்.

921. ஜாவா அரசன் தன் நான்கு குமாரர்களையும் ஒருகுமாரத்தியையும் தென்னிந்தியாவில் படிக்கும்படி அனுப்பினான்.

கி. பி.

944. வீரநொளம்பன், வீரதிரிநேத்ர பல்லவன் ஆளுகை.

973. நொளம்பர் (பல்லவர்) குலத்திற்கு அந்தகன் (யமன்) இராஷ்டிரகூட்டன் காக்கா III.

985. ஆநந்தவர்மதேவன் (பல்லவன்) ஆளுகை.

1000—1100. பல்லவரின் தலையாய நகரம் காஞ்சிவரம்.

பல்லவர் சோழவரசருக்குட்பட்ட சிற்றரசர்களாயிருந்தார்கள்.

பல்லவவம்சம் முடிந்தது.

பல்லவர்தேசம் சோழர்கைவசமாயது.

சளுக்கியவரசன் சோமேசுவரதேவ அஹவமல்லன் காஞ்சியைச்சுட்டெரித்தான்.

1042—1067. சளுக்கிய வேந்தன் அஹவமல்லன் II பல்லவராஜகுமாரத்தியை மணந்து சோழருக்கெதிராக அவர்களுடன் உடன்படிக்கைசெய்தான்.

1050. ஸ்திரகம்பீரநொளம்பன் (பல்லவன்) ஆளுகை.

1064. குலோத்துங்க இராஜேந்திரசோழன் I குமாரனாகிய ஆதொண்டை, பல்லவரை முற்றுங்கருவறுத்தான்.

ஆதொண்டை ஜின தேவாலயங்கள் ஐந்துதவிர மற்றவைகளை இந்து தேவாலயங்களாக மாற்றினான்.

1070. அஹமல்லபல்லவன்.

சளுக்கியவரசன் புவனைகமல்லனுக்குப் பல்லவவேந்தன் திறைகட்டிவந்தான்.

1074. சளுக்கியவரசன் சோமேசுவரன் II பல்லவரசனை ஜெயித்தான்.

ஸ்ரீ பல்லவராசன் வங்கபுரத்தில் அரசாட்சிசெய்தான்.

1075. கொங்குகளுடன் உதயாதித்யதேவன் பல்லவராசனையழித்தான்.

1077. காஞ்சியில் இராஜேந்திர பல்லவராயனின்பட்டயம்.

1079. ஜெயசிம்மதேவ நொளம்பபல்லவன் சளுக்கியருக்குள் வனவாசியையாண்டான். சளுக்கியவரசன் 6-வது விக்ரமாதித்யனுக்கு இளைய தம்பி இவன் (?).

1081. சளுக்கியவேந்தன் 6-வது விக்ரமாதித்யன் பல்லவவரசரைவென்று அவர்கள் சிம்மாசனமேறினான்.

கி. பி.

1100—1200. சோழர் தம் எல்லைகடவாவண்ணம் கொளம்பவாடி மாகாணத்தையேற்படுத்தி மேலைச்சளுக்கியர் பல்லவசிற்றரசனொருவனுக்களித்தான்.

1104. பல்லவர்தேசம் பேர்மாறி (Sinda) I வசமானது.

1114. சளுக்கியவரசன் 6-வது விக்ரமாதித்யன் பல்லவரை ப் பல்லவம்பிடிக்கச்செய்தான் (Spronts).

1115. தொண்டமண்டலத்தில் பல்லவ சிற்றரசனின் பட்டயம்.

1120. வெள்ளாளன்(Ballala) விஷ்ணுவர்த்தனன் பல்லவ அரசனை வென்றான்.

நரசிம்மவர்மன் (பல்லவன்) ஆளுகை.

1140. சளுக்கியவரசன் ஜகத்தேக்கமல்லன் பல்லவரைத்துரத்தி அவர்கள் தேசத்தைத் தன்னிராஜ்யத்துடன் சேர்த்துக்கொண்டான்.

1200—1400. பல்லவவம்சம் அழிந்தது.

1223. யாதவகுல சிங்கணதேவன் பல்லவ அரசனை ஜெயித்தான்.

ஞானதிக்கமச்சாது,
இரங்கூன்.

---

# "மதுரைத்தலவரலாறு."

(௩௯-ம் பக்கத்தொடர்ச்சி.)

"சகாப்தம்-௧௬௬௮-க்கு மேற்செல்லாநின்ற சித்தார்த்திவருடம் வைகாசிமீ ௨௰-ஆந்தேதி செவ்வாய்க்கிழமை இராத்திரி, பங்காரு திருமலைநாயக்கரவர்கள் குமாரன் விசயகுமாரு முத்துத்திருமலை நாயக்கரவர்களும், சேதுபதி வாசல் தளவாய் வெள்ளையன் சேர்வைகாரனும் சந்தேகான் படேசாவும் வந்து திண்டுக்கல்லைக்கட்டிக்கொண்டான் என்ற செய்திகேட்டு எடுபட்டார்கள். அந்தமுன்னுக்கு மீனாக்ஷிசுந்தரேசுவரர்களையும், கூடலழகரையும், வானரவீரர் மதுரைக்கு எழுந்தருளப்பண்ணுவித்துக்கொண்டு ஸ்தலத்தார் அனந்த கொத்துப் பரிசனங்களுங் கூடப்போயிருந்தவிடத்தில் சேதுபதியவர்கள் சுவாமிக்குப் பூஜைநைவேத்தியத்திற்குக்கொடுத்துப் பரிஜனங்களுக்

ரும் அன்னபானாதிகளுக்குங்கொடுத்துச் சித்தார்த்தி ௵ ஆனி௴ முதல் துன்மதி௵ ஆனி௴ வரைக்கும்வருஷம்௨-க்கு ஆகரித்துவந்தார் இப்படியிருக்கிறவிடத்தில், தேசிங்குராசாவும் அறுபதினாயிரம் குதிரையுடனே வந்து திரிசிரபுரம் கோட்டையை வளைத்துக்கொண்டுபடேகாரையும் வெட்டித் துலுக்கரையெல்லாம் எடுத்துவிட்டு திரிசிரபுரங்கோட்டைக்கு முராரிராயரை நியமித்துச் சிவஸ்தலம் விஷ்ணுஸ்தலமெல்லாம் முன்பின்னத்துப்படிக் கச்சர்வமானியமாக விட்டுப் பூஜை நைவேத்திரங்களெல்லாங் குறைவராமல் நடப்பிக்கச் சொல்லி வடக்கே போய்விட்டார்கள். அதின் பிறகு முராரிராயரவர்கள் தர்மிஷ்டரானபடியினாலே அப்பாச்சிநாயக்கரவர்களைப் பயணப்படுத்தி இரண்டாயிரங் குதிரையும் பயணப்படுத்தி, மதுரைக்கோட்டைக்கு வந்து சுவாமியில்லாத பட்டணத்திலே நாமிருக்கிறது என்னவென்றுடனே பயணம் புறப்பட்டு வானரவீர மதுரைக்கு ஸ்தானீகாள் முதல், அநந்த கொத்துப்பரிஜனங்களையுங் கண்டு சுவாமி தெர்சனம் பண்ணிக்கொண்டு, சேதுபதி மக்கியஸ்தருங்கொடுத்து, துன்முகி௵ ஆனி௴ ௰௭-ஆந்தேதி சனிக்கிழமை நாள்போது போந்து இரண்டு நாழிகை யளவில் மதுரைக்கு வந்துசேர்ந்துகோவிலிலே யெழுந்தருளினார்.

முன் கர்நாடகத்தில் அத்துப்படிக்கு கோவில்களும் பூமியும் விட்டுக்கொடுத்துச் சாந்தி, சம்புரோக்ஷணையும் பண்ணிப்பூஜை நைவேத்தியமுற்சவாதிகளும் விமரிசையாக நடப்பிவித்தார்கள்.

சகாப்தம் [illegible]-க்கு மேல் செல்லாநின்ற உருத்திரோத்காரி௵ வடக்கே இருந்து நிசாம் என்கிற துலுக்கன் திரிசிரபுரங்கோட்டையும் மதுரைக்கோட்டையுங் கைக்கொண்டு மாபோசிகான் சாயபு அவர்கள், மப்பூஜ்கான் சாயபு அவர்களிரண்டு பேரையும் வைத்துப்போட்டு வடக்கே போய்விட்டான். உருத்திரோத்காரி௵ முதல் ஆங்கிரச௵ கார்த்திகை௴ ௨௰-ஆந்தேதி வரைக்கும் ௵ [illegible]-க்கும் [illegible] வரை துலுக்காணியமாய்ச் சிலகாலராஜ்ஜியம் ஆண்டார்கள். இப்படியாருமிடத்தில் மதுரைக்கோட்டை அப்துலாகுமுகான் நாளையில் மயானாமைத்துனன் ஆல்முகான் தொண்டைமான் சீமைவழியே இரண்டாயிரம் குதிரையுடனே வந்து,

மதுரைக்கோட்டையைக் கட்டிகொண்டு ஒருவருஷம், திருவடிராஜ்ஜியம் முதல்கொண்டு மருட்டி திரிசிரபுரம் கோட்டைக்குப் பயணம் போகிறபோது மதுரைக்கோட்டைக்கு மயாணவை வைத்துப்போட்டுத் திரிசிரபுரத்தில் சந்தேகான் பாளையத்திற்போய்ச்சேர்ந்து தர்க்கம் பண்ணினவிடத்தில் ஆல்முகானும் பட்டுப்போனன். மருட்டிமம்முதல்லீகான் நவாப்சாயபு அவர்கள் சந்தேகான் பாளையத்தை யெடுபடச்செய்வித்துச் சந்தேகானையும் பிடித்து வெட்டிப்போட்டார்கள்.

"அப்படியிருக்குமிடத்தில் மதுரைக்கோட்டையிலிருந்து மயாண மைசூர் ராஜவட்டம்பண்ணி மதுரைக்கோட்டையை மைசூராருக்கு விற்றுப்போட்டுத் திருமூரிற் போய்விட்டார். அதின் பிறகு மைசூர்வகை கூகுசாய்பு ஆங்கிரசஸு புரட்டாசிமீ ௩௰-ஆந்தேதி கோட்டையிற் பிரவேசமானர். இப்படி மைசூரார் மதுரைக்கோட்டையைக் கட்டிக்கொண்ட செய்திகேட்டுச் சேதுபதிவாசல் தளகர்த்தம் வெள்ளையன்சேர்வைகாரரும், உடையாத்தேவர் வாசல் பிரதானி தாண்டவராயபிள்ளையும் இருவரும் வெகுதளத்துடனே வந்து மதுரைக்கோட்டையை வளைத்துக்கொண்டார்கள். கூகுசாய்பு கோட்டைக்குள்ளே நாளது புரட்டாசிமீ ௩௰-ஆந்தேதி முதல் கார்த்திகைமீ ௨௬-ஆந்தேதி வரைக்கும் கோட்டைமுத்திரையாக்கி மத்தியஸ்தத்தின் பேரிற் கோட்டையைச் சேதுபதி வசம் விட்டுப் போட்டுத் திண்டுக்கல் முகமாய்ப் போய்விட்டான். இந்தப்படி உருத்திரோத்காரிஸு முதல், ஆங்கிரசஸு கார்த்திகைமீ ௰௬-ஆந்தேதி வரைக்கும் இந்தப்படியாகி நாநாவித சல்லியங்களாக இருந்தமையினலே, கலியுகம்-௪௮௱௩௰-சாலிவாகன சகாப்தம்-௧௬௱௯௰-க்கு மேற்செல்லா நின்ற ஆங்கிரசஸு கார்த்திகைமீ ௧௬-ஆந்தேதி சேதுபதி வாசல் தளகர்த்தம் வெள்ளையன்சேர்வைகாரரும் உடையாத்தேவர் வாசல் தளகர்த்தம் தாண்டவராயபிள்ளையும், மதுரைக்கோட்டையிற் பிரவேசமாகிக் கோவிலுந்திறந்து, பூஜைநைவேத்தியமும் நடப்பிவித்து, கூகுசாய்பு அடைகோட்டையிலே அனேகம் பசுக்களை வதை பண்ணித் தென்னமரங்களையும் வெட்டித்தின்று பட்டணமெல்லாம் அவந்தரை பண்ணினபடியினலே, ஏழுகோவிலுக்குஞ்சாந்தி சம்

*

ரோக்ஷணையும் பண்ணிவைத்து ராஜ்ஜியத்துக்கு ராஜாவில்லாமலிருக்கலாகாதென்று, பங்காருதிருமலை நாயக்கரய்யனவர்கள் குமாரர், விசயகுமாரு முத்துத்திருமலை நாயக்கரவர்களை, வெள்ளிக்குறிச்சியிலிருந்து அழைப்பித்து, ஆங்கீரச௵-மார்கழி௴ ௧௪-ஆந் தேதி சோமவாரம் நாச்சியார் சன்னிதியில் பட்டாபிஷேகம் பண்ணுவித்துக் கொண்டு செங்கோலும் வாங்கிக்கொண்டு அரமனை சேர்ந்தார்கள்.

"அதின் பிறகு ஆங்கிரச௵ மாசி௴ ௰௪-ஆந்தேதி முதல் ஸ்ரீமுக௵ வைகாசி௴ ௩௰-ஆந்தேதி வரைக்கும் ௴ ௰௩-க்கு ராஜ்ஜியம் ஆண்டு வருகையில், மயாணாவும், பகதிமீயாவும், நபீகானும் இந்த மூன்றுபேரும் கோட்டையிலிருந்த கர்த்தாக்களைக்கோட்டை விட்டு வெளியே துரத்தி வெள்ளிக்குறிச்சிக்கு அனுப்புவித்துப்போட்டு மதுரைக்கோட்டையுஞ் சீமையும் கட்டிக்கொண்டு பழையபடிக்கு ஆண்டுவருகையில் கோவில் சீமை பூமியெல்லாம் அவாந்திரமாய்க்கட்டிக்கொண்டு பட்டணத்தில் செட்டிவர்த்தகர்களையுங் கெடுத்து, தோப்புத்துரவுகளையு மழித்து, இப்படிக்கெல்லாம் அவலம்பண்ணிக்கொண்டு இருக்கிற வேளையில் மைசூரார் வகை கூகுசாய்பு வெள்ளையன் சேர்வைகாரரோடு வந்து கோட்டையைச் சுற்றிக்கொண்டு பனையூர் அணுப்பாலடியில் ஆறுமாதமாய்ப் பாளையமிறங்கிக்கொண்டு இருந்து சாதித்தவிடத்திலே வெள்ளையன் சேர்வைகாரரையும், கூகுசாய்புவையும், மயாணா கூட்டம்வெட்டித் துரத்திப்போட்டு, ஸ்ரீமுக௵ ஆனி௴ முதல் பவ௵ மாசி௴ ௨௧-௳ வரைக்கும் மதுரைச் சீமையும் கோட்டையுங் கட்டிக்கொண்டு இருக்குமிடத்தில் கலியுகம் ௪அ௱௩-சாலிவாகன சகாப்தம் ௲௬௱-க்கு மேற்செல்லாநின்ற பவ௵ மாசி௴ ௨௨-௳ வடக்கே தேவனும் பட்டணத்திலிருந்து பரங்கிகளாயிரம் பேரும் இருபது பீரங்கியும், மாபோசுகான் நவாபுசாய்பு அவர்களும் புறப்பட்டுவந்து நத்தத்துக்கணவாய் வழியாகவந்து மதுரைக்கோட்டையைக் கட்டிக்கொண்டு மயாணா இருந்த திருப்பரங்குன்றக்கோவிலையும் கோட்டையாகச்செய்துகொண்டு சண்டைபண்ணினபடியினாலே அந்தக் கோவிலையெல்லாம் பரங்கிகள்போய்க் கொள்ளையிடத் திருவாபரணங்களையு மெடுத்துக்கொண்டு விக்கிரகங்களையுமெடுத்துக்கொண்டு மதுரைக்கோட்டைவந்து சேர்ந்தார்,

"அதன்பிறகு திருநெல்வேலி வரைக்கும் போய் மதுரைக்குவந்து வடக்கே திரிசிரபுரத்துக்குப் பயணம்போகிறபோது திருமோகூர் விக்கிரகங்களை ஒட்டகையின்பேரில் போட்டுக்கொண்டு போகிறபோது அழகர்கோயில் பாதையில் நாட்டுக்கள்ளர்கள்வந்து விழுந்து விக்கிரகங்களைக் கைவசப்படுத்திக்கொண்டு கோயிலிலே கொண்டுவந்து சேர்த்தார்கள். அதன்பிறகு மதுரைக்கோட்டையிலே மாபோசுகான் நவாபுசாய்பு அவர்கள் மனுஷன்பருக்குதில்லாவிருந்து அதிகாரம் பண்ணுகையில் ஒரு துலுக்கப்பக்கிரிவந்து சுவாமிசன்னதியிலே திருமலைநாயக்கர் கட்டுவித்த புதுமண்டபத்துக்கு முன்பாக ராயர்கோபுரத்துத் திருநிலைக்காலிலே நிசான்கட்டுவித்துக்கொண்டு கோபுரத்தின் மேடையிலே கொடிகட்டுகிறதற்கு இரண்டுபடைச்செங்கல் சுவரும் போட்டுவித்துக்கொண்டு இருக்கிறவேளையில் ஸ்தலத்தார் அனந்தகொத்தும் பட்டணத்திலிருக்கிற செட்டிவர்த்தகர்கள் சகல ஜனங்களும் சங்கேதமாகக் கூட்டங்கூடி ஆனமட்டும் பிரயத்தினம் பண்ணின விடத்தில் காலம் திவாணமானதினாலே கோபுரத்தைவிட்டு இரங்கமாட்டோமென்று கோபுரத்திலேதானே யிருந்தான். ஸ்தலத்தார் நான்கு கோபுரவாசலையும் அடைத்துக்கொண்டு சன்னதிவாசல் திட்டிதுறந்துகொண்டு கோவிலுக்குள்ளே இருந்தார்கள். இப்படியிருக்குமிடத்தில் யுவ௵ தைமீ ந-உ சுவாமிகோவில் ஆஸ்தானமண்டபம் பொற்கம்பத்தடிக்குத் தென் கீழ்மூலையில் இருக்கிற வாதாடும் பத்திரகாளியம்மனிடதுகண் தைமீ ந-உ விடிந்து இரண்டு நாழிகையளவில் விழித்தகண் ரு-உ உதயகாலத்தில் மறைந்தது. இந்த அதிசயம் நான்குமுகத்திலேயும் அறியப்பட்டு வெகு ஜனங்களெல்லாம் திருநாள்போலேவந்து பார்த்து அதிசயப்பட்டார்கள். அப்பால் ஈசுவர௵ சித்திரைமீ முதல் வடக்கே தேவணம்பட்டணத்திலிருக்கிற பரங்கிகள் வகைக்கு முந்தான்கானுசாய்பு அவர்கள் தெற்கே திருநெல்வேலியில் போயிருந்தவர் மதுரைக்கோட்டையைச் சுற்றி வளைந்துகொண்டு சித்திரைமீ முதல் ஆவணிமீ வரைக்கும் கோட்டையடைபட்டு ஜனங்கள் எல்லாம் வெகு உபத்திரவப்பட்டு புரட்டாசிமீ வரையில் கோட்டையிலேயிருந்த பராக்குதுல்லா கல்லின் பேரில் இறங்கி திருப்புவனம் போய்ச்சேர்ந்தான். கானுசாய்பு அ

வர்களும் திரிசிரபுரம் கோட்டையிலிருக்கிற மீனாக்ஷிநாதபிள்ளை குமாரன் முத்தழகுபிள்ளை அவர்களும் வந்துகோவில்வாசல்பட்டண மெல்லாஞ்சுற்றிப்பார்த்து கானுசாய்பு அவர்கள் சமுகத்திலேபோய் இந்தச் சன்னதி மகாசன்னதி, மகாதெய்வங்கள், கர்னாடகத்திட்டம் நடப்பிவிக்கவேணுமென்று சொல்லி கோவிலுக்கு முன் பின் அத்துப்படிக்கு கர்னாடகத்தில் நடந்தபிரகாரத்துக்கு கோவில்சீமை யெல்லா மேழுகோவிலுக்கும்விட்டு சுவாமி திருவாலவாயுடையார் கோவிலுக்கும் சாந்தி சம்ரோக்ஷணையும் பண்ணுவித்து ராயகோபுரத்திலிருந்து பக்கிரியினுடைய நிசானையும் பிடுங்கி அவனையும் அடிதண்டமாகவடித்து பேட்டுக்கு அப்பாலேகொண்டுபோய்விட்டு கோவில்களுக்கு நித்தியப்படி தேர், திருவிழா, உற்சவாதிகளும் நடப்பிவிக்கிறதற்கு மீ க-க்கு ஆயிரம் பொன் வீதம் வருஷத்திலெ ௰உ ரூ பொன் வீதம் நடப்பிவிக்கச்சொல்லி தலத்தார் நிருபகிராமங் கட்டளைக்கிராமம் அர்ச்சனுபாககிராமம் விட்டுக்கொடுத்து நடப்பிவித்துக்கொண்டு வந்தார்கள். இந்தப்பிரகாரம் ராஜ்ஜியம் ஆளுகையில் புதுச்சேரி பரங்கிகளுக்கும் தேவனாம்பட்டணம் பரங்கிகளுக்கும் கலாபம்வந்து திரிசிரபுரம் கோட்டைவரைக்கும் புதுச்சேரியார் கட்டிக்கொண்டு இருக்குமிடத்தில், இவ்விடத்திலிருந்து கானுசாய்பு அவர்களும் முத்தழகுபிள்ளையும் திரிசிரபுரங் கோட்டைக்குப் போய், புதுச்சேரிப் பரங்கிகளைத் தொம்சமாய் அடித்து அவர்கள் கட்டின சீமையெல்லாம் கட்டிக்கொண்டு தேவனாம் பட்டணத்தில் கபித்தானை சந்திக்குமிடத்தில், கபித்தான் சகல விருதுங்கொடுத்து வெகுமதியுஞ்செய்து, பிரமாதி௵ வைகாசிமீ மதுரைவந்து சேர்ந்தார்.

"பிரமாதீச௵முதல் சித்திரபானு௵ வரைக்கும்ஸ்தலத்தார், கிராமம் பூமிகளுக்குள்ள பொறுப்பும் வாங்கிக்கொண்டு கிராமங்களும் விட்டு கோவில்பூஜைக்கு ௵ க-க்கு ஆயிரம்பொன் திட்டப்படிக்கு நடப்பிவித்துக்கொண்டு வந்தார்கள். சுபானு௵ புரட்டாசிமீ முதல் தாருண௵ புரட்டாசிமீ வரைக்கும் சென்னபட்டணம் வெள்ளைக்காரரில் மேஸ்தர் கர்னல்பிரேஷ்டனும் வெகுபேர் வெள்ளைக்காரரும் நவாபும் மமுதிலீகான் நவாபுசாயபு அவர்களும், மா

போசு கான்சாயபு அவர்களும், சேதுபதி உடையாத்தேவர் தொண்டைமான் முதலான பாளையப்பட்டுச்சனங்களும் வந்து கோட்டையைச்சுற்றிவளைந்துகொண்டு அடைகோட்டைப்பட்டது. சகாப்தம், ௲௬௱௮௰௬-க்கு மேற்செல்லாநின்ற தாருண௵ ஐப்பசிமீ ௩-௨ மம்மது இசுபுகானையும் பிடித்துத்தூக்கிலே போட்டு நவாப்பு மம்மது லீகான்சாயபு அவர்களும் கோட்டைக்குள் பிரவேசமானார்கள். அப்போது ஸ்தானீகர் ஸ்தலத்தார் சகலமான பேர்களும் போய்க்கண்டார்கள். அப்போது மதுரைச்சீமை அமில் அபுதுலுகான்சாயபு அவர்களுக்கு உத்திரவான வயணம்-ஏழு கோவிலுக்கும் ௵-க்கு, ஆறாயிரம்பொன் பூஜைதிட்டம் பண்ணுவித்துஸ்தலத்தார் கிராமம் பூமியும் விட்டு மாமூல்படிக்கு நடப்பிவைத்து கோவிலுக்கு ஐந்நூறு ரூபாயுங்கொடுத்துச் சம்ரோக்ஷணையும் நடப்பிவைத்தார்கள். இந்தப்பிரகாரம தாருண௵முதல் விகுருதி௵-வரைக்கும் மம்மது அபுதுலுகான்சாயபு அவர்கள் துரைத்தனம் ௵-௭. கர-௵-முதல் ஹேவிளம்பி ௵வரைக்கும் மோதீன்சாயபு அவர்கள் துரைத்தனம். மல்லாரிராயரவர்கள் துரைத்தனம் ௵-௨. அப்போது தபாசி வெங்கிடேசுவரமுதலியார் கோவில்பூஜைக்கு ஏற்றுக்கொண்டு ஆறாயிரம்பொன் ரொக்கம்வாங்கிக் கோவிற் பூஜை நடப்பிவித்து வந்தார்கள்.

"விளம்பி௵ காதருசாயபு அவர்கள் துரைத்தனம் ௵ ௪, விகாரி௵ கயாலாபெருகான் சாய்பு அவர்கள் துரைத்தனம் ௵ ௩. சார்வரி௵ முதல் பிலவ௵ வரைக்கும் ௵ ௨ மல்லாராயரவர்கள் துரைத்தனம். சுபகிருது௵ முதல் குரோதி௵ வரைக்கும் ௵ ௩-க்கு மேஸ்த்தர்ட்டூரியன் துரையவர்கள் நாளையில் கித்தலூர் வெங்கிட்டராயரவர்கள் அதிகாரத்தில் நவாபு சாய்பு அவர்கள் பார்வாணைப்படிக்குக் கோவிற் பூசை ஆறாயிரப்பொன் திட்டம் பண்ணினபடிக்கு நடப்பிவைத்து ஸ்தலத்தார் நிர்வாகக்கிராமங்கள், கட்டளைக்கிராமங்கள் அர்ச்சினாபாகக்கிராமங்கள் பட்டர்வீதி சகலமும் விட்டு நடப்பிவித்து வந்தார்கள். விசுவாவசு௵ தீவாணத்தமிலாய் செகுமம்மதுசாய்பு அவர்கள், அமுல் பண்ணினார்கள். பராபவ௵ சுப்பராயரவர்கள் அமுல் பண்ணினார்கள். பிலவங்க௵ இரா

மசாமி ஐயனவர்கள் அமுல் பண்ணினார்கள். கீலக௵ முதல் செளம்ய௵ மாசி௴ வரைக்கும் சுப்பராயரவர்கள் அதிகாரம். செளமிய௵ பங்குனி௴ முதல் சாதாரண௵ ஆவணி௴ வரைக்கும் ராமசாமி அய்யனவர்கள் அதிகாரம் பண்ணினார்கள். சாதாரண௵ புரட்டாசி௴ கும்பினியாருக்குச் சீமையாகி மேஸ்தர்மக்களூட்டு துரையவர்கள் விரோதிகிருது௵ வரைக்கும் அதிகாரம் பண்ணினார்கள். அவர்கள் அதிகாரத்தில் நவாபு சாய்பு அவர்கள் பர்வாணைப்படிக்கு நடப்பிவித்தார்கள். அதின்பிறகு, பரிதாபி௵ காதருசாய்பு அவர்கள் அதிகாரம் பண்ணினார்கள். பிரமாதீச௵ முதல் ஆனந்த௵ வரைக்கும் இரண்டு ௵ ராமசாமி அய்யனவர்கள் அதிகாரம் பண்ணினார்கள். ராக்ஷச௵ நள௵ ௵௨-க்கு பொக்ஷதார் வெங்கிட்டராயரவர்கள் அதிகாரம் பண்ணினார்கள்.

"பிங்கள,காலயுக்திக்கு ௵ ௨ ராமசாமி ஐனவர்கள் அதிகாரம் பண்ணினார்கள். சித்தார்த்தி௵ ராவோபண்டிதரவர்கள் அதிகாரம் பண்ணினார்கள். ரௌத்திரி௵ நாராயணராயரவர்கள் அதிகாரம். அதுவரைக்கும் கோவிற் பூசையும் மாமூல்படிக்கு நடப்பிவித்து நிர்வாகக்கிராமங் கட்டளைக்கிராமம் முதல் நடப்பிவித்தார்கள். ரௌத்திரி௵ ஆனி௴ ௫௳ முதல் துன்மதி௵ ஆடி௴ ௨௰௧௳ வரைக்கும் மீறு அஸ்தாகான்பாதரவர்களுக்குச் சீமையாய் ரெங்கராயரவர்கள் அதிகாரம்பண்ணினார்கள். அவர்களும் மாமூல்படிக்கு நடப்பிவித்தார்கள். அப்பால் துன்மதி௵ ஆடி௴ ௨௰௪௳ மகாராஜ மான்யராஜ ஸ்ரீ: கும்பினியாரவர்கள் பாரிசமாகி மாமூல்படிக்கு நடப்பிவிக்கிறார்கள்.

"சாலிவாகன சகாப்தம் ௲௭௱௨௰௮ கலியப்தம் சகூ......௨ இதன்மேல் செல்லாநின்ற துன்மதி௵ ஆடி௴ ௨௰௪௳ திசா...ம ............ கோட்டுமாசதி மகாசாமானிய...ர......கும்பனியாரவர்கள் பரிசம் சீமை செப்பித்தியாய திண்டுக்கல் சீமைமூட்டுக்கும் கலெக்ட்டராயிருக்கிற மகா-ள-ள-ஸ்ரீ மேஹுர் ஆற்மேசுசாய்பு அவர்கள் மதுரைச்சீமைக்கும்கலெக்ட்டராய்சீமைசேர்ந்தபடியினாலேஉடனே மதுரைக்குச் சின்னத்துரை மகா-ள-ள-ஸ்ரீ கியாமேனே சாய்பு அவர்களும், பேஷ்கார் பீமராயர்வர்களும் மதுரைச்சீமைக்குப் பேஷ்கார்,

நாராயணராயரவர்களும் உ௰௪-ல் வந்துசேர்ந்தார்கள். உ௦௫-ல் சின்னத்துரையாகிற மகா-௱-௱-ஸ்ரீ கியானே சாய்பு அவர்கள் ௨௫-ல் வந்துசேர்ந்தார்கள். சீமையெல்லாம் கும்பினியார் அவர்களுடையதாகையினாலே கான்சாய்பு அவர்கள் அரமனைக்கச்சேரியில் கச்சேரிபண்ணினார்கள். அவர்களுடைய பயத்தினாலே சீமையாதியந்தம் வணங்கிக்கொண்டு வெகுவாய்பயந்து நடந்தார்கள்.”

---

# அருங்கலான்வயம், சீவகசிந்தாமணி, சூளாமணி.

கிறிஸ்தப்தத்துக்கு 50, 60 - வருடங்கட்கு முன்னர், ஸ்ரீபத்ரபாஹு ஸ்வாமிகள், தம்முடைய அஷ்டாங்க மஹாநிமித்த தத்துவஞானத்தால், முக்காலமு முணரவல்லாராதலால், ஏதோ சிற்சில துர்நிமித்தங்களைக்கண்டு, பன்னிரண்டுவருடங் கொடியக்ஷாமம் வரப்போகிறதென்றறிந்து தம் சங்கத்தார்க்குணர்த்த, அவர்களும் ஸ்வாமிகள் நியமனப்படி உஜ்ஜினியைவிட்டு நீங்கித் தென்றிசைநோக்கிப் பற்பல கிராமங்களையும் தரிசித்து, கடைசியாய், ஜனசங்கையாலும், தனதான்னியங்களாலும், பசுமுதலிய கால்நடைகளாலும் குறைவற்றிருந்த கடவப்பிர (1) க்ஷேத்திரத்தை வந்தடைந்தார்கள்.

இவ்வாறு குடியேறிய ஜைனர்களில் வெகுபிரக்கியாதியடைந்த மகான்கள் பலராவர்.

---

(1) இது பழங்கன்னடபாஷையில் கழ்வெப்பு என்றும் இக்காலத்து ஸ்வேதஸரோவரம், சிரவணபேள்குளம் என்றும் பெயர் பெற்றது. இது மைசூரிலாகாவைச்சேர்ந்த ஹாசனப் ஜில்லா, சென்னராயபட்டணந் தாலூகாவில், சென்னராயபட்டணத்துக்கு சமீபத்தில், 8-மைல் தூரத்திலிருக்கிறது. இவ்வூரில் 400-அடி உயரமுள்ள குன்றொன்றின்மீது 62-அடி உயரமுள்ள பாஹுபலி, ஜோம்மடேச்வர, ... என்னும் ஸ்வாமியின் உருவஞ்செய்து நிறுத்தியிருக்கிறது. இக்கிராமமோர் அழகான முழு ஜைனக்குடியிருப்பு. இதனடுவில் தவளஸரோவரமென்னும் பெரிய அழகான குளமொன்றுண்டு.

தென்னாட்டில் ஆருகதமதம் பரவிச் செழிக்க மூலகாரணராயிருந்தவர் ஸமந்தபத்திரஸ்வாமிகள். இவர் ஆப்தமீமாம்சை யென்னேர் முதன்மையான கிரந்தமியற்றினர். இச்சுவாமி பார்த்திருஹரியை ஆங்காங்கே குறிக்கின்றமையால், இப்பார்த்திருஹரியின் காலமாகிய கி. பி. 650-க்குப் பிற்பட்டவராதல்வேண்டும். இவர்க்குப்பின் ஆப்தமீமாம்சைக்கு அஷ்டசதி என்ற வியாக்கினமொன்றருளிச் செய்தார் அகளங்கதேவர். இவர்காலத்துக்குப் பின்னிருந்த சிம்மநந்தியாசாரியர் கங்கராஜ்ஜியம் ஸ்தாபித்தாரென்று கூறியிருக்கிறது. நவசப்தவாச்சியமியற்றிய வக்கிரகிரீவர் சிம்மநந்திகளுக்குப்பிற்பட்டவர். ஆப்தமீமாம்சைக்கு மற்றுமோர் உரை, ஆப்தமீமாம்சாலங்காரம் அல்லது அஷ்டஸஹஸ்ரீ என்னும் பெயரால் பாத்திரகேசரியாசாரியாரா லியற்றப்பட்டது. இவருக்குச் சற்றேறக்குறைய சமகாலஸ்தரான மாணிக்கநந்தி என்பவர் பரீக்ஷாமுகம் என்னும் ஸ்யாத்வாத கிரந்தம் எழுதிமுடித்தார். மேற்கூறிய அகளங்கதேவர் சிஷ்யரான பிரபாசந்திரர் பரீக்ஷாமுகத்துக்கு பிரமேயகமலமார்த்தாண்டம் என்னுமோர்வியாக்கினமும் நியாயகுமுதசந்திரோதய மென்னும்நூலுமியற்றி உத்தேசம் கி. பி. 750-ல் சல்லேகனைவிதியால் (2) சமாதியடைந்தனர். இவரைக்குறித்த சாஸனமொன்று சிரவணபெள்குளத்திலிருக்கிறது.

இவ்வாசாரியர் வழியிலேயே தோன்றியவர் ஜினசேனர். இவர் ஜைனஹரிவம்சமும், பார்சுவாப்பியுதமும் மஹாபுராணத்தின் முதற்பாகமாகிய ஆதிபுராணமுமியற்றியவர். இவர் கி. பி. 783 முதல் 814 வரையிருந்தவர். இவர் சிஷ்யர் குணபத்திரமுனிவர். இவர் தம்மாசாரியரால் தொடங்கப்பட்டு செய்யாதிமுடிவுபெற்ற மஹாபுராணத்தின் பிற்பாகமாகிய உத்தரபுராணமெழுதிமுடித்தார். இவர் இராட்டவரசனாகிய முதல்அமோகவர்ஷன் காலத்தும், இவன் குமாரன் இரண்டாம்கிருஷ்ணதேவன் காலத்துமிருந்தவர். இப்புராணம் முடிவுபெற்றது கி. பி. 897 (3). இவ்வுத்தர புராணத்திற்றான் சீவகன் சரித்திரம் வருகிறது. இப்புராணமே தமிழிலக்கியங்

---

(2) இடையூ றொழிவில்நோய் மூப்பிவை வந்தால்,கடைதுறத்தல் சல்லேகனை", அருங்கலச்செப்பு.

(3) தமிழகம் தொகுதி 1, பக்கம் 135-ஐப்பார்க்க.

களிலாங்காங்கு "புராணப்பொருளாதலின்", "மெய்யாகிய புராணப் பொருளாலே" என்று குறிப்பிட்டுள்ளது. இக்குணபத்திராசாரியர் சிஷ்யர்தான் தமிழில் சூடாமணிநிகண்டு செய்த மண்டலபுருஷன் என்று தமிழகம் 1-தொகுதி 136-ம் பக்கத்து ஸ்ரீமாந்—குப்புஸ்வாமி சாஸ்திரிகள் மிகத்தெளிவாய்க் காட்டியிருக்கிறார்.

மேற்கூறிய ஜைனசாரியர்கள் பற்பல சங்கத்தாராகப் பிரிக்கப்பட்டிருந்தார்கள். ஒவ்வொரு சங்கத்திலும் பலகணங்களுள; இக்கணங்களும் தம்முள்ளே பல அன்வயங்களடங்கியுள்ளன. தென்றேயச் சங்கங்களில் மிகப்பிரபலமாயிருந்தது திரமிளசங்கம். இத்திரமிள சங்கத்தில் பிரசித்தியடைந்தது நந்திகணம்; நந்திகணத்தில் அருங்கலான்வயம் (4) வெகுபிரக்கியாதியடைந்தது. அருங்க கலான் வயம் தியங்குடியின் நிடும்பறை தீர்த்தத்தின் அருங்களான்வயமென்று ஒருசாஸனத்தில் (5) குறிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் இவ்வருங்கலான்வயத்தார் முதல் முதல் தியங்குடியாராயிருந்திருக்க வேண்டுமென்பது பெறப்படும். இத்தியங்குடி திருவாரூர்ப்பக்கத்து 4-மைல் தூரத்தில் தீபங்குடியென்ற பெயருடன் இற்றைக்கும் ஜைனஸ்தலமாக விளங்குகிறது. இவ்வன்வயத்தோர் தமிழரேயாயினும் தமிழ், கன்னட, சம்ஸ்கிருத பாஷைகளிலதிநிபுணர்கள். இவர்கள் தமிழரேயென்பது இவர்களுள் ஒருவராகிய புஷ்பசேனர் தம்பெய

---

(4) ஸ்ரீத்ரமிளஸங்கேஸ்மிந் நந்திஸங்கேஸ்த்யருங்கலः।
அந்வயோபாதியோசேஷ ஶாஸ்த்ரவாராஶிபாரகை: ॥

" த்ரமிளஸங்கே நந்திகணே அருங்கலான்வயே ....."

இந்தசம்பந்தத்தில் "அருங்கலச்செப்பு" என்னும் கிரந்தத்தின் பெயர் கவனிக்கத்தக்கது. அருங்கலான்வயத்தாரொருவராலியற்றியது என்பது தொனிக்கிறது.

(5) "ஸ்ரீமத்தியங்குடிய நிடும்பறை தீர்த்தே அருங்கலான்வயே ஸம்வாஸே நந்திகணே"

(Ep. Carn-Shimoga Vol. II. No. 35).

*

ரைப் புற்பசேனன் என்றெழுதிக்கொள்வதனாலும் நன்குவிளங்கும்[6]

இந்நந்தி கணத்தாருள்ளொருவராகிய பூஜ்யபாதர் என்பவர்தான் ஜைனேந்திர வியாகரணகர்த்தா; இது,

இந்த்ரஶ்சந்த்ர: காஶக்ருத்ஸ்நாபிஶலீஶாகடாயந:।
பாணிந்யமரஜைநேந்த்ரா ஜயந்த்யஷ்டாதிஶாப்திகா:॥

என்று வோபதேவரால் குறிக்கப்பட்டுள்ளது. அருங்கலான்வபத்தாரொருவராகிய தயாபாலர் சப்தாநுசாஸனத்துக்கு "ரூபசித்தி" என்றோர் பிரக்கிரியை செய்திருக்கிறார்.

குணபத்திரமுனிக்குப் பின் குமாரசேனரென்றொருவரும், அவர்க்குப் பின் சிந்தாமணியாசார்யரும், அவர்க்குப் பின் ஸ்ரீவர்த்ததேவருமிருந்தார்கள். அவர்களில் இரண்டாவரை—

யஶ்ஶ்ரீஸர்வ்வகார வசிநிவத்ருதிவாசாவிஜ்ஞசிந்தாமணி: ப்ரதிநிதி
கேதாஸகாரியெந ; ஸஹஸ்ரயபிதஸாஸமெஸாவந் ஸாஜாவஸா
ஜாதஶ்சிந்தாமணிஜநிஶ்ரேஷா நகஸபஜநெந ॥

என்று வர்ணித்திருக்கிறது. * "தர்மார்த்த காமமோக்ஷங்களைக்குறித்து விவரிக்கும் சிந்தாமணியை வீடுகடோறும் பரவச்செய்த அப்பெரும்புகழ்படைத்த சிந்தாமணி முனியை சிந்தாமணியால் மிக்க நன்மையையடையுமாந்தர்களெவ்வாறு புகழாதிரார்" என்பது இதன்கருத்து. ஜைனர்களால் சதுரர்த்தத்தையுந் தரவல்லதாய்க் கொள்ளப்பட்டது, சிவகன் சரித்திரம் என்பது ஜைனமதவிஷயமறி

---

(6) "ஸ்ரீமதநமஹாமண்டலாசாரியரும் ராஜகுருகளும் அப்பஸ்ரீ புற்பசேனதேவரும்......"

தர்க்கவ்யாகரணாஶ்ரிம ஸ்வஸமய ஸதிஜ்ஞரஜேநயம் பூர்வ்வே
ஸ்ரீநந்திஸ்வநயராஜஸேநமணி: ஸ்ரீவாதிராஜோமுனி: ।
தச்சிஷ்ய: பரவாதிவர்க்கஸவிம் ஸாஹித்யநாதாகர:
ஜீயாத்ஜ்ஞநவிளாஸஜநஸம்வதிவக: ஸ்ரீபுஷ்பஸேனோமுநி:॥

(ஷி No. 44.)

* Sravana Belgola. No. 54.

ந்தவரெவர்க்கும் தெரிந்தவிஷயம். இப்படியிருக்க, இச்சிந்தாமணியை சாகடாயன வியாகரணத்தின் உரையாகிய சிந்தாமணியாயிருக்கலாமோவென்று மைசூர் சாஸன பரீக்ஷகராகிய ரைஸ்துரையவர்கள் மயங்குகிறார். இவ்வுரை எவ்வாறு சதுரார்த்தத்தையுந் தரத்தக்கதோ விளங்கவில்லை. இது சீவகன் கதையேயாமென்பது எமது துணிவு. இதற்குச்சான்றாக இவ்வாசாரியரை மற்றோர்சாஸனத்தில்,

> சக்ரே சிந்தாமணிர் காவ்யம் ஸர்வாபீஷ்டப்ரதாயகம் ।
> சிந்தாமணிர் ஜைனானாம் ஸ ஜைனசிந்தாமணிர் முனி: ॥

"சர்வாபீஷ்டங்களையுந்தரவல்ல சிந்தாமணியென்னுங் காவ்யத்தைச்செய்த சிந்தாமணிநாமாவானவர் ஜைனர்கட்கு (ஜைனர்கட்கு) ஓர் சிந்தாமணி (நினைப்பதெல்லாவற்றையும் தர வல்லதோர்மணி) யைப்போன்று துலங்கினார்" என்று புகழப்பட்டுள்ளார்.*

இச்சிந்தாமணியாசார்யரின் பின் காலவரையறையில் ஸ்ரீவர்த்ததேவர் வைக்கப்பட்டிருக்கிறார். இவர் இச்சாஸனத்தில்,

> சூடாமணி: கவீநாம் சூடாமணிநாமஸேவ்ய காவ்யகவி: ।
> ஸ்ரீவர்த்ததேவ ஏவ ஹி க்ருதபுண்ய: கீர்த்திமாஹர்த்தும் ॥

என்று வியந்துகூறப்பட்டுள்ளார். கீர்த்தியடையவேண்டியவளவுபெருமையையுடைய சூடாமணியியற்றிய ஸ்ரீவர்த்ததேவரானவர் புலவர்கட்கெல்லாம் ஓர் தலைச்சூட்டணியைப்போன்றிருக்கிறார் என்பது இதன்பொருள். இதையும் ரைஸ்துரையவர்கள் தத்துவார்த்த மஹாசாஸ்த்ரத்துக்கு சூடாமணியென்றெழுதப்பட்ட உரையாயிருக்கலாமென்று நம்புகிறார். இச்சங்கை தவறென்பது, சூடாமணியையோர் காவ்யமென்று கூறியிருப்பதாலுணரலாம். அன்றியும் திருமுக்கூடல் நரசிபுரம் தாலூகாச்சாஸனமொன்றில்,*

> வித்வச்சூடாமணிஸ் சூடாமணிகாவ்யக்ருதே ।
> சூடாமணிஸ்தாவ்யாஸஹஸ்ரலக்ஷ்யலக்ஷ... லக்ஷண: ॥

---

* No. 105. Tirumukudal, Narasipur Taluk.

அறிவாளர்க்குத் தலையணிபோன்று சூடாமணியென்று பெயர்கூறப்பட்ட சூடாமணி காவ்யமாக்கியோன் காவ்யாலங்காரங்களெல்லாம் எடுத்துக்காட்ட வல்லனாயிருந்தான் என்று ஒருவாறு பொருள்படும் சுலோகத்தால் சூடாமணியென்பவர் புகழப்பட்டிருக்கிறார். ஸ்ரீவர்த்ததேவர் தாமியற்றிய காவியத்தால் சூடாமணியென்று பெயர்பெறுவதை நோக்கின் சிந்தாமணியாசாரியர் என்பதும் காரணப்பெயர் என்று சொல்ல இயலாதா? மேற்காட்டியதில் சூடாமணி ஓர் காவியமென்பது நன்றாய்க் கவனிக்கத்தக்கது.

இவ்வாறு சிந்தாமணியையும் சூடாமணியையும் அடுத்தடுத்துக் கூறுவதனாலும், இரண்டுங் காவியங்களென்பதனாலும், இவைகளையியற்றினவர்கள் திரமிள சங்கத்தாராயிருந்தலாலும், எழுதிய கிரந்தங்கள் முறையே சதுரர்த்தங்களைத் தருவன, தலைமேன்மையத் தக்கனவென்று வர்ணிக்கப்பட்டிருத்தலாலும், அவை, தமிழ்ச்சீவக சிந்தாமணியும் சூடாமணியுமாயிருக்கலாமென்று ஊகிக்கப்படுகின்றன. இன்னும் இவ்விருகிரந்தங்களும் ஜைனசமயத்தன. இவையெழுதியவாசாரியர்கள் மஹாபுராணமெழுதியதற்குப் பிற்காலத்தாராகவுமிருக்கிறார்கள். ஆதலால் மேற்குறிப்பிட்ட ஊகம் சரியாயின், இந்நூல்கள் கி. பி. 897-க்குப் பிற்பட்டனவாகவேண்டும்.

சிந்தாமணி உரைச் சிறப்புப்பாயிரத்தில்;

“வையகம் புகழ்ந்து மணிமுடி சூட்டிய
பொய்யில் வான்கதை பொதிந்த செந்தமிழ்ச்
சிந்தா மணியைத் தென்கடன் மாநிலம்
வந்தா தரிப்ப வண்பெரு வஞ்சிப்
பொய்யா மொழிபுகழ் மையறு காட்சித்
திருத்தகு முனிவன் கருத்திது வென்ன..........”

என்று இந்நூலைச் சிறப்பித்தும், அதன் ஆக்கியோன் பெயரையும், அவரைப்புகழ்ந்தோர் பெயரையும் தெரிவித்துமிருக்கிறது. சிந்தாமணியியற்றியவர் பெயர் இதன்படி திருத்தக்கதேவரென்பது. இஃது இவர் இயற்பெயராயும், சிந்தாமணியாசாரியரென்பது காரணப்பெயராகவுமிருக்கலாம்.

இதிலேயே கூறப்பட்டுள்ள பொய்யாமொழியென்னும் தொடர் சத்தியவாக்கியன் என்னும் பொருள்படுமோவென்று ஸ்ரீமாந் மகாமகோபாத்தியாயர்-சுவாமிநாதையரவர்கள் ஊகித்தார்கள். அது பொருந்தலாம் என்பது அடியில் வருமாற்றான் விளங்கும். கங்கராஜ்யத்தை அக்காலத்திலாண்டவன் சத்தியவாக்கிய கோங்குணி வர்ம்மபூதுகபெருமானடி என்பவன். இவ்வரசன் கி. பி. 908 முதல் 950 வரையிலரசாண்டவன். கங்கர்களிலனேகர் ஜைனமதாபிமானிகள். ஆதலால் இவ்வரசனேயாகக்கூடுமென்று தோற்றுகிறது. ஆயின், இவ்வரசனே சங்கன்: உரைச்சிறப்புப்பாயிரத்துக் கூறப்பட்டுள்ளவனுகிய பொய்யாமொழியோ வஞ்சியானென்று தெற்றென விளங்குகின்றான். கங்கர்களும் ஒருக்கால் பழையகாலத்தில் வஞ்சிப்பிரதேசத்திலிருந்து வந்ததாகக் கொண்டனரோ அறிகிலேம். கங்கநாட்டுத் தகடூரிலுள்ள சிற்றரசனொருவன் வஞ்சியர்குலபதி யெழினிவகுத்த வியக்கரியக்கியரோ டெஞ்சிய வழிவுதிருத்திப்பெண்குணவிறைதிருமலை வைத்தான்.—அஞ்சிதன்வழிவருபவன் வழிமுதலிகலி அதிகன்ல........................விடுகாதழகிய பெருமாளே." என்று தன்னுடைய குலம் கோத்திரம் முதலிய சொல்லிக்கொள்வதனால் இக்கங்கனும் வஞ்சியிலிருந்து வந்தவர்கள் வழித்தோன்றலோவென்ன மனந்துணிகிறது. உண்மையறியக்கூடவில்லை. இனி,

சூளாமணியின் "நூற்சிறப்"பில்

திக்கெட்டும் புகழ்படைத்த திறல்விசயன் புயலனைய கையன் றெவ்வைக்
கைக்கொட்டி நகைக்குமிகற் கார்வெட்டி யரையன்வள நாடற் கேற்பப்
பொக்கெட்டு மில்லாதான் புகழ்தரும தீர்த்தகன்மலர்ப் பதம்பூ சிப்போன்
சொற்கெட்டா வரன்றேலா மொழிசூளா மணியுணர்வோர் துறைகண்
[டோரே.

என்று அதைச்செய்தவர் பெயரையும், அவர்காலத்தரசன்பெயரையும் கூறியிருக்கிறது. தோலாமொழியென்பது ஒரு பட்டப்பெயரேயன்றி அவர் இயற்பெயராகாது. ஸ்ரீ வர்த்ததேவர்க்கே தோலாமொழியென்று பெயரிருக்கலாமென்று தோன்றுகின்றது. கார்வெட்டிவிஜயன் இன்னுனென்று இப்பொழுது விளங்கவில்லை. ஆயின்

கங்கநாட்டில் இவ்வாசாரியர்களிருந்தகாலத்து, தொளம்பபாடிப் பல்லவர்க *ளென்று ஒருவம்சத்தார்க ளாண்டுவந்தார்கள். இவன் இவ்வம்சத்தாரிலொருவனாக வேண்டுமென்பது நிச்சயம்.

மறுபடியும் சூளாமணிப்பாயிரத்தில்,

நாமாண் புரைக்குங் குறையென்னினு நாமவென்வேற்
றேமா ணலங்கற் றிருமானெடுஞ் சேந்த னென்னுந்
தூமாண் டமிழின் கிழவன்சுட ராரமார்பிற்
கோமா னவையுட் டெருண்டார் கொளப்பட்டதன்றே (பா. 3.)

என்று கூறியிருக்கிறது. இப்பாடலிற் குறிக்கப்பட்ட திருமானெடுஞ் சேந்தனும், மேற்காட்டிய பாட்டில் புகழப்பட்ட விசயனும் ஒருவனென்று நினைக்கவேண்டியிருக்கிறது. இவை இவ்வாறு நிற்க,

முன்னர்ச் சிந்தாமணி சூளாமணி விஷயங்களை எடுத்துரைத்தது சரியெனக்கொள்ளில் இவையியற்றிய சிந்தாமணியாசாரியரும் ஸ்ரீவர்த்ததேவரும் சுமார் கி. பி. 900-ல் இருந்திருக்கவேண்டுமென்பது விளங்கும்.

சிந்தாமணியை நச்சினார்க்கினியரும் பழநூலாகப்பாவிக்கவில்லை. ஆதலால் மேற்கண்ட ஊகம் ஒருகால் சரியாகவும் கூடும்.

து. அ. கோபிநாத ராவ்.

---

* தொளம்பர், பல்லவர், காடுவெட்டி, காடவன், போத்தரையன் என்பன பல்லவவம்சத்துப்பெயர்கள்.

திருச்சிற்றம்பலம்.

# ஏனாதிநாயனார் புராணம்.

(முன்றேடர்ச்சி.)

---

(௧) புண்டரிகம் - புலிக்கொடி.. பொன்வரை - மேருமலை. வயல்கள் பொருந்திய மருதமாகிய குளிர்ந்த இடஞ்சூழ்ந்து. எயினனூர் - மதில்பற்றிவந்தபேரென்று கொள்வாருமுளர். அங்ஙனங் கொள்ளுங்கால் சிறையுடைய மதில் பொருந்திய பழைய ஊர் எயினனூரென்க.

(௨) நாணற்கரும்போடு மென்மையாகிய கரும்பும், குளிர்ந்த வயல்களிலே தாழ்ந்துபோகக் கதிர்களையுடையநெற்கள் உயருந்தன்மையதாகக் குடிகள் விருத்திபெற்றிருக்கின்ற அவ்வெயினனூரில் உள்ள ஈழக்குலத்தவதரித்த சான்றார் ஏனாதிநாயனார். ஈழக்குலச் சான்றார் என்பதைப் பிராமணகுலத்துப் பிறந்த பிராமணன் என்பதுபோலக் கொள்க.

(௩) திருநீற்றைப்பேணுதலாகிய தொண்டன் வழிபாடு.

(௪) அகங்காரத்தாலடியையும் முடியையுங்காணாதவிட்டுணு பிரமாக்களையும் பேரருளால் அடிமைகொண்டாளுகின்ற சிவபெருமானுடைய அடியார்களுக்கு ஆக்குவார். கடப்பாடு - கடமை.

(௫) கள்ளாத தங்களுடைய தொழிலுரிமையின் தாயபாகத்துள்ளான் அதிசூரனென்பவனொருவனிருந்தான்.

(௭) தான் ஆள்கின்ற விருத்திகெடத் தங்கள் குலப்பங்கினீங்காத செய்தொழிலாகின்ற ஆசிரியத்தன்மையாலாகும் வளமானது தனக்குக்குறைந்து அவருக்குமேற்படலால் நாயனார்மாட்டே இசையாத பகையைச் செய்தான்.

(௮) சூரியனுதிக்க ஒளிகுன்றித் தோற்றங்கெடுகின்ற உதயகாலத்துச் சந்திரன்போல.

(௧௧) சேர்வுபெறுமாறு கச்சால் அரையிற் செறிந்த உடைமேற்கட்டி.

(க௨) வேறிடத்து நின்றவர்களாகிய மாணுக்கர்.

(க௩) பெற்றிபொருந்திய ஆண்புலி.

(க௫) வலியஇடியேறு, மேகராசிகளை முன்கொண்டு, மின்வரிசைகளைத்தன்னடுவிற்கொண்டு ஆகாயத்திலும் பூமியிலும் எதிர்செல்வனபோலாக நெடிய பரிசைக் கூட்டங்களையும் முயற்சிபொருந்திய தொழிலையுடைய வாளையும் உடைய ஆடவர். உருமேற்றிற்கு ஆடவரும், மேகத்துக்குப் பரிசையும், மின்னலுக்கு வாளுமாய்.

(க௬) காலில் வீரக்கழல்கட்டிய வீரர்கள், கைகளிலுள்ள, சரீரத்தையடக்குமாறு மிகுந்த ஒளியையுடைய பரிசை முற்படவந்து இரண்டணிவகுப்புக்களிலும் முற்பட்டார்கள். வேலொடுவேல் எதிரே நீளுதல் தாமிருந்த பாதலத்தைவிட்டு உயர்ந்தபூமியிற் பொருந்திய நாகவீரர்கள் நாவைச்சுழற்றலையொத்தன. கைகளிலுள்ள வட்டமுனைத்திட எனக் கூட்டுக.

(க௭) வேறாகிய இரண்டணியிலுமெதிர்ப்பவர்களாகிய வன்கண்மையையுடைய வலிமைபொருந்திய வில்வீரர்களுடைய விற்கூட்டங்கள் சொரிந்த குற்றமில்லாத பாணங்கள் நெருங்குதல் சிவந்த கண்ணிலிருந்து புறப்படும் அக்கினியானது கிளர்ந்தகோபாக்கினியினின்றும் போகின்ற புகைக்கொடிகளை வளைத்து எதிரே சிந்திய சிறிய பொறிகளின் செலவையொத்தன. விழிக்கனல்-எழுவாய்.

(க௮) தோளொடு தோள்கள் தகைந்தன. பரிசையோடு பரிசைகள் வெட்டுண்டு வீழ்ந்தன. நாளொடு - வாழ்நாளொடு.

(க௯) எருவை - கழுகு. விசியறுதுடி - வார்க்கட்டறுந்த உடுக்கை.

(௨௦) தூரத்தினின்றுஞ் சமீபத்துநடந்து, நேரேயெதிர்த்த இருவரிலொருவன் பொருத்தையுடையகால்களும் இருதொடைகளுமற, முன்னரேபெயர்கின்ற சாரிகை முறைப்படி வெட்டினன். வெட்டுண்டு வாளொடு வீழ்கின்ற உடல் தன்னைவெற்றிகொண்டோனுடைய மார்பு இடையிலேயற, முன்னரே எறிய, சிங்கேற்றைப்போன்ற அவனும் இறந்தான்.

(உக) கூரியநுதிபொருந்திய வேற்படையைக் கொண்டெதிர்த்தோர் சேர்ந்து முன்னரே உருவும்படி பரிசையோடு நேரே மார்பூடுருவ உரப்போடு ஒருவர்க்கொருவர் நேரே யெதிரெதிராகக்குத்தினர்; அரிய ஆன்மா நீங்கவும், நிற்கின்ற அவர்களுடைய ஆண்டகைமையில் இருவரும் ஒத்திருந்தமையைப் போரிலே பகைவரைக் கொல்கின்ற படைக்கலங்களைக்கொண்டு அளவிடுபவரைப்போல்பவர் அளவிறந்தோரிறந்தனர்.

(உஉ) சில வீரராயுள்ளோர் அழகிய வில்வளையும்படி எதிர்ந்தவர்கள் புற்றிலுள்ள பாம்புபோன்ற பாணங்கள்பட, வில்லாகியபடை வெட்டுண்ணவும், நில்லாதவர்களாய் வெற்றிபொருந்திய உடைவாளை வீசினர்; முதன்மைபொருந்திய கொடையானது நிலைநிற்க முதிர்ந்த பெரிய செல்வமின்றியும் தம்மிடத்துள்ள பொருளாயுள்ளவற்றையுங்கொடுத்த கொடைக்குணமுடையாரைப்போன்றனர். சிலகண்டகர்கள் உளர் எனமாறுக.

(உஙு) யுத்தமுனையில் இறந்தவர்களாகிய வீரர்களுடைய பரந்தமுகங்களுமிருள்ளனவென்று வருகின்ற படர்ந்த சிறையையுடைய சூழ்கின்ற கரியகாகங்கள் செல்வன சுழல்வன நெருங்குதலில. ஒளியையுடைய கண்கள் கொல்லருடைய உலைமுகத்திலே பொதிந்த பக்கத்தே நெருங்கிய கரியின்கட் டங்கிய புகையைவிடுகின்ற அக்கினியை நிகர்த்தன. அழல் கண்ணும், கரி காகமுமாம்

(உஎ) எதிராதோர் யுத்தகளத்தைவிட்டு நிலையானமெய்யுணர்வுவந்தபோதே அலைவுபட்ட காமமுதலிய குற்றங்கள்போலாயினர். விட்டு ஆயினர் எனமுடிக்க. மெய்புணர்வு வந்தபோதே குற்றங்கள் எவ்வாறோடுமோ அவ்வாறு இவரைக்கண்டோடினரென்பது கருத்து.

(உசு) யுத்தகளத்தில் சிலபடைவீரர் புண்பொருந்திய வழியே சொரியுங் குடர்களைக் கிளர்ந்த கழுகு பருந்தோடு கொண்டெழுகின்ற பொழுதினும் முற்செய்கை குன்றுதலிலராய் அம்முயற்சியின் கணின்றனர்; அவர் ஆகாயத்திற்செல்கின்ற கொடியை விடுகின்ற குணம்பொருந்திய விளையாட்டுப்பிள்ளைகளை வென்றனர்.

*

(௨௫) இம்முனைய - இந்தப்பகையையுடைய.

(௨௮) மீண்டாராகிய படைஞரைக்கொண்டு. விறல் வீரராகிய வெவ்வியபுலிப் போத்தையொத்த நாயனார்க்குமுன்.

(௨௯) அந்நாயனார் தமது சாதுரியத்தால் கூரிய வாளினொளிகாணச்சுற்றிவருகின்ற இடசாரி வலசாரியாகிய வட்டணையிலேதோன்றாதபடி சேர்ந்து பிடித்துத்தாக்கும்பொழுது அதிசூரனும் போரிலே பிழைபட்டு. படையையெறிந்துவிட்டென்றும், படையை வெட்டுண்ணக்கொடுத்ததென்றுமாம்.

(௩௦) மண்படுவான் - மண்விழுவான். அதிசூரனை இங்ஙனமாசிரியர் கூறியது இவனதுவஞ்சகக்கொடுமைபற்றி யெனவறிக. பாயலின்றிப் பூமியிற்படுப்பவனெனக் கோடலுமாம். பூமியிலிறப்பவனெனக்கோடல் சிறப்பின்று.

(௩௧) சேட்டாரும் - நீடித்தல் நிறைந்த; சேடு, ஆரும் எனப்பிரிக்க. வாட்டாயம் வாளினதுரிமை.

(௩௨) தான் என்றது அதிசூரனை. மேற்கொள்வார் - உடன்படுவார்.

(௩௬) விடக்கு - தசை.

(௩௮) மேற்கண்டேன் - இப்பொழுதே கண்டேன்.

(௪௦) அறிவாரிவர்க்கருள - அறிபவராய் இவருக்கு அநுக்கிரகஞ்செய்ய.

(௪௧) இனி நாம் ஏனாதிநாயனாருடைய பெருமையைப் புகழ்வதென்னை, பகைவனது கையிலுள்ள வாளால் பாசத்தைக்கெடுத்துத் தேவநாயகராகிய சிவனருளைப்பெற்றவரை எந்நாளுந்தம்மோடுடன் பிரியாத அன்பைக்கொடுத்து.

(இன்னும் வரும்)

ஜி. சதாசிவம் பிள்ளை.

# தனிச் செய்யுட் கோவை.

---

திரிசிரபுரம், அஷ்டாவதானம் ஸ்ரீமத் - இராமலிங்கம்பிள்ளையவர்கள் அகவலில் அமைந்த பழைய விடுபாடலொன்றை உதவினார்கள். இது, தலைவனுடன் வாழ்தலைவிரும்பிய தலைவி தோழிக்குக் கூறியதாம். இது பிள்ளையவர்கள் கூறியவாறே வேறு சிலரிடத்தும் கேட்கப்பட்டது.

“இராமழை பெய்த வீரவீ ரத்துள்
பனைநுகங் கொண்டு யானையேர் பூட்டி
வெள்ளி விரைத்துப் பொன்னே விளையினும்
வேண்டேன் பிறந்தகத் தீண்டிய வாழ்வே;
செங்கேழ் வரகுப் பசுங்கதிர் கொய்து
கன்று காத்துக் குன்றி லுணக்கி
ஊடுபதர் போக்கிமுன் னுதவினோர்க் குதவிக்
காடுகழி யிந்தனம் பாடுபார்த் தெடுத்துக்
குப்பைக் கீரை யுப்பின்று வெந்ததை
இரவற் றுலம் பரிவுடன் வாங்கி
சோறது கொண்டு பீற லடைத்தே
ஒன்றுவிட் டொருநாட் டின்று கிடப்பினும்
நன்றே தோழிநங் கணவன் வாழ்வே”

இதனை, “வேண்டேன் பிறந்தகத்தீண்டியவாழ்வே” என்பதுவரையுள்ள அடிகளைத் தனியாக்கி இரண்டுபாடலாகவும் வழங்குவர்.

---

திருவேகம்பமுடைய நயினார்பேரில் இரட்டையர் அருளிச்செய்தவண்ணம்.

மறுத்தோன்ற வெளுத்தபிறை படப்பாந்த ளிடைச்செருகி
வளர்த்தோங்கி முடித்த சடையார்—காஞ்சனை மனையார்
மலர்க்காந்தள் முருக்கவிழ யிதழ்த்தேன்கள் குறித்தொழுகி
மடைத்தேங்கி யடைத்து வருநீர்—போஞ்சுழிவழியே
சிறுத்தாண்டில் முரித்தசுற வரக்காம்ப லுழக்கியொரு
சிறுச்சேம்பை முறித்து வெடிபோய்—வீழ்ந்தயலருகே

இடப்பாங்கர் முடக்கமுகின் மடற்கீன்று களித்துவரு
திருக்காஞ்சி புரத்தி லுறைவரே—காம்பாரடியே
குறித்தேர்ந்து தடிக்குளுடல் வளைத்தாம்பி மூளைத்தனைய
குடைக்காம்பு பிடித்து வரும்வே—தாந்தவிரதியிர்
குலக்காந்த ளெருத்தனெடு குலக்காந்தி யொருத்தியிரு
குடித்தீங்கு விளைத்து மிகுமால்—பூங்கொடியனையான்
உறச்சேர்ந்து மடித்தலையுள் லவர்த்தேங்கள் தமக்குமல
உயிர்ப்பாங்கி தமக்கு மலடா—தாம்புயமலரே
உலைப்போன்ற பாற்பொதியி னடித்தீய்ந்து விரற்கருகி
யுலக்கான்ற சுரத்தில் வருநீர்—தேர்ந்துளிர்தெரிவிரே"

இப்பாடல், இச்சங்கத்துள்ள காஞ்சிபுராணக்கவித்துறைப் பிரதியினிறுதியில் எழுதப்பட்டிருந்தது.

---

சவ்வாதுபுலவர் சிவகங்கை கவுரிவல்லப மகாராசாவிடம் பரிசிற்காகப் பலநாட்காத்திருந்தும் அதுபெறாது, அரசனைக்கண்டபோது பாடியது.

வல்லவனு குங்கவுரி வல்லவனைக் காத்திருந்தாற்
கல்லையிலைக் காகிலைக் காசுண்டா—வல்ல
சபிமான முண்டா வருமையுண்டா வாய்ச்சொ
லுபசார மாயிலுமுண் டா.

இப்பாட்டுக் கூறவும் அரசனுக்குக் கோபம்பிறந்து, புலவரைச் சிறைப்படுத்தான். இவ்வாறு, புலவர் சிறைக் கூடத்திருந்தபோது, அரசன் மைத்துனராகிய திருமலைத்தேவர் வந்துபார்க்க, அப்போது படிக்காசுப்புலவர் கூறியது.

நாட்டிற் சிறந்த திருமலையா துங்க நாகரிகா
காட்டில் வனத்திற் றிரிந்துழ லாமற் கலைத்தமிழ்தேர்
பாட்டிற் சிறந்த படிக்காச னென்னுமோர் பைங்கிளியைக்
கூட்டி லடைத்துவைத் தாளிரை தாவென் றுகூப்பிட்டதே.

இப்பாடலைக்கேட்டு அரசன் மைத்துனர் புலவரைச் சிறைநீக்குவித்தார்.

---

கடிவாங்குங்கமழ்சேது ரகுநாத னேறிவருங் களிநல் யானை
அடிவாங்கி முன்னடந்தால் வடகலிங்கங் கிடுகிடென்றே யதிரு மக்கள்
குடிவாங்கு மேழ்கடலு முள்வாங்கு மொன்னலர்கள் கோட்டை வாசற்
படிவாங்கும் பாராசர் முடிவாங்கும் சேடன்முடி பதைக்குந் தானே.

இஃது, இரகுநாதசேதுபதிபவனிவரும்போது யானைமேலேறிச்சென்ற சேதுஸம்ஸ்தானப்புலவரான சவ்வாதுப்புலவர் சேதுபதியேறிவந்த யானையைப் புகழ்ந்துகூறியது. இதில் "யானை அடிவாங்கிமுன்னடந்தால்" என்னுந் தொடர் பொருட்சிறப்பின்றி "பாகனால் அடிபெற்று முன்னடக்குமாயின்" என்னும் இழிபொருள் பயப்பதாக, அப்பவனியிலே சிவிகையிலேறிச்சென்ற பிழைபட்டி அழகிய சிற்றம்பலக் கவிராயர் சேதுபதிக்கு எடுத்துவிளக்கி தாம் வேறு கவி பாடிக்களிப்பித்தனரெனவும், சேதுபதி அதற்கு மகிழ்ந்து அக்கவிராயரைச் சிறப்பித்தனரெனவுங்கூறுவர்.

---

சவ்வாதுப்புலவர் புதுக்கோட்டைராசாவைப்பற்றிப் பாடியது.

காயாத தீயுமில்லை பாயாத புலியுமில்லை கற்றோர் வந்தால்
ஆயாத வேந்த னில்லை மடிக்கனத்தால் வழிப்பயமுண் டாய்த்துபாராய்
சாயாத முடிவிசய ரகுநாத தொண்டைமான் சாற்றக் கேண்மோ
நீயாதி சேடனொப்பை கல்வியுண்டு கேள்வியில்லை நீசங்கண் டோமே.

பிரசங்கமாலையினின்றும் எடுக்கப்பட்டது.

எட்டைய புரநாக லாபுரம் மணியாச்சி யிரசக்க ஊர்கோட் டையூர்
வழாயி ரம்பண்ணை சங்கைநூ ருற்றுமலை யெழுமலை மருங்கை நல்லூ
ரிலகுமன் னூர்கோட்டை பாவாலி சிவகிரி யிலக்கைய னூர்முல் லையூ
ரிடையகோட் டைப்பதி விலக்கோட்டை தேவாரம் ராமகிரி கன்னிவாடி
தொட்டப்ப னூர்கம்பை காசைவா ராப்பூரு தோகைமலை யழகாபுரி [மாத்
சுரண்டைதலை வன்கோட்டை பழனியாய்க் குடிசமுத் தூர்விருப் பாச்சிபட்
டூர்கடம் பூர்பெத்த னன்னூற்று நகர்குளத் தூர்காயனூர் சாப்டூர்
அம்பிச்சி நாய்க்கனூர் நத்தமூர்க் காடுசேற் றூர்வெள்ளி குன்ற மலைய
பட்டிவட கரையமைய நாயக்க னூர்கொல்ல பட்டிசக் கந்தி கோலார்
பட்டிமத வானையூர் மேன்மாந்தை ரோசலைப் பட்டிவீ ரமலை சிங்கம்
பட்டிநெற் கட்டுசெவல் நற்பெரிய குளமாத்தி பட்டிகுரு விகுளமதுவார்
பட்டிகரி சற்பட்டி நவுக் குறிச்சிகோம் பைகவண் டன்கோட் டையூர்

கட்டபொம் மன்னூர்கு மரவாடி கவினிளசை கடுவூர்நல் லுதயப்பனூர் முங்
கனகொலங் கொண்டாவெண் டெழுபத்தி ரண்டுடன் கருதுமெண்ணேழ்தேச
கவியருமை யறிபவர்க ளுண்டதினு நின்போற் கவித்திறமி யாவரறிவர்
கனமேவு புனல்சூழும் வயல்நீடு மலைமேவு கதிர்காம வடிவேலனே.

இக்கவியிற் பாண்டியநாட்டிலுள்ள எஉ - பாளயப்பட்டுக்களும் கூறப்பட்டுள்ளமை காண்க.

இராமசாமிக் கவிராயர்,
சேற்றூர்ச் சமஸ்தான வித்வான்.

---

# சிற்றாராய்ச்சிகள்.

## க. காப்பியக்குடி.

உரையாசிரியராகிய இளம்பூரணவடிகள், "தொல்காப்பியன்" என்பதற்கு "பழையகாப்பியக்குடியிலுள்ளோன்" என்று பொருள் கூறுதலால், 'காப்பியம்' என்பது பார்ப்பாரது பழயகுடிவகையுள் ஒன்றென்று விளங்குகிறது. இக்குடியே "காப்பியத்தொல்குடி கவின்பெறவளர்ந்து" எனச் சிலப்பதிகாரத்தும் கூறப்பட்டுள்ளது. பல்காப்பியனார், காப்பியாற்றுக் காப்பியனார் என்னும் பழைய தமிழாசிரியரும் இக்குடியைச் சேர்ந்தவர்போலும். இனி, இருக்கு முதலாயவேதங்களில் இந்திரனுடைய நட்பாளராகிய உசனர் என்னும் இருவர் "காவ்யர்" என்று அழைக்கப்பெறுகிறார். அஃதாவது கவியின் வமிசத்தவரென்பது. காவ்யன், உசனன் என்பன சுக்கிரபகவானுடைய பெயர்கள். எனவே, தொல்காப்பியனார் முதலியோர் அக்காவியக்குடியில் உதித்தவரென்று நிச்சயிக்கலாம். இனி, தொல்காப்பியனார் என்னுந் தொடரிலுள்ள "தொல்" என்னும் அடை காப்பியக்குடிக்குப் புணர்க்கப்பட்டதென்று கொள்ளுதல் ஒன்று; அன்றி அதனை அக்குடிப்பிறந்த முனிவர்க்குரிய தாக்கலும் பொருந்தும்; வடமொழியில் பராசரர் என ஒரு முனிவர் காணப்படினும் அவரின்வேறாக "விருத்தபராசரர்" என்னும் அடையுட

னும் ஒருவர் வழங்கப்படுகின்றார். அதுபோலவே தமிழ்மொழியில் வழங்கும் காப்பியர் பலரினின்று பிரித்தற்குத் "தொல்" என்னும் அடை புணர்க்கப்பட்டதென்று கொள்ளலாம். தமிழில், "விருத்த" சப்தத்திற்கு நேராகத் "தொல்" என்பதை வழங்கல் பழையவழக்க மென்பது, கபிலர் எனப் பெயர்பெற்ற புலவர் பெருமாளொருவர் இருப்பினும், அவரின்வேறாகத் "தொல்கபிலர்" என மற்றொருவர் சங்கச்செய்யுள்களில் வழங்குதலாலும் தெளியத்தக்கது.

## உ. அந்தணர்.

இச்சொல்லுக்கு நச்சினார்க்கினியர் "வேதாந்தத்தையே பொருளென்றுமேற்கொண்டு பார்ப்பார்" எனப் பாலைக்கலியிலும் பத்துப்பாடலொன்றிலும் பொருள் கூறியிருத்தல் பலர் அறிவர். அந்தத்தை அணவுவார் அந்தணர் என்பது அவர் பதப்பிரிப்பு.

"அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்"

என்பதனால், "அழகிய தட்பத்தினையுடையார்" என்னும் நேர்பொருளுடைய இச்சொல்லுக்கு, நச்சினார்க்கினியர் இவ்வாறுபொருள்கூறியது சிலர்க்குப் புதுமையாகத்தோன்றக்கூடுமாயினும், திருமந்திரத்தில் வரும் "அந்தண்மைபூண்ட அருமறையந்தத்துச் சிந்தைசெய் யந்தணர்" என்னும் பாசுரத்தினின்று அவ்வுரையாளர்க்கு இக்கருத்து உதித்திருத்தல் கூடுமென்று தோற்றுகின்றது. இத்திருமூல அடிகளில் அந்தணர் என்ற சொற்கு, அழகிய தண்மைபூண்டவரென்றும், வேதாந்தத்தைச் சிந்தைசெய்பவரென்றும் இரண்டுபொருள் கூறப்பட்டிருத்தல் கண்டுகொள்க.

## ௩. திருமந்திரப்பாடல்.

இலைநல வாயினும் எட்டி பழுத்தாற்
குலைநல வாங்கனி கொண்டுண லாகா
இளையாண், முலைநலங் கொண்டு முறுவலிக் கின்ற
வினையுடை நெஞ்சினை வெய்து கொளீரே.

இத்திருமூலர்வாக்கு, யாப்பருங்கலவிருத்தியில், சீர்மிக்குவந்த ஆரிடச்செய்யுட்கு உதாரணமாகக் காட்டப்பட்டுள்ளது. இப்பா

டலின் மூன்றாமடியின் முதற் சீராகிய “இளையாள்” என்பது இப்போது அச்சுப்பிரதிகளிற் காணப்படவில்லையாயினும், பழைய நூலாகிய அவ்விருத்தியில் அஃதிருத்தல் காண்டலால், முன்னையதே பழம் பாடமென்பது துணிவாகும்.

### ௪. ஒட்டக்கூத்தர் ஊர்.

“கம்பனென்றுங் கும்பனென்றுங் காளியோட்டக்கூத்தனென்றுங், கும்பமுனி யென்றும்பேர் கொள்வாரோ” எனவரும் பாடலைப் பலர் அறிவர். இதனுள் “காளியொட்டக்கூத்த”னென்பது “காழியொட்டக்கூத்த”னென்று பிரதிபேதங் காணப்படுகிறது. எனவே சீகாழியே கூத்தரூர் என்பது பெறப்படும். இவ்வாறன்றிக் “காளியொட்டக்கூத்தன்” எனக்கொள்ளுமிடத்துச் சிறந்தபொருளின்மைகாண்க. அன்றியும், ஒட்டக்கூத்தர், தாம்பாடிய தக்கயாகப் பரணித் தொடக்கத்தே, திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரைத் தம் குலதெய்வமாகக்கொண்டு வாழ்த்துதலும் அவரூர் அதுவேயாதல் வேண்டுமென்பதற்கு ஒரு சான்றாகின்றது.

### ௫. திருவள்ளுவர் ஊர்.

இத்தெய்வப்புலவர் மைலாப்பூருக்குரியவரென வழக்குளதாயினும், இவர் மதுரைமாநகரிலும் இருந்தவரென்பதற்குத் தக்க மேற்கோள் ஒன்றுண்டு. திருவள்ளுவமாலையில்,

“உப்பக்க நோக்கி உபகேசி தோண்மணந்தான்
உத்தர மாமதுரைக் கச்சென்ப—இப்பக்கம்
மாதாநு பங்கி மறுவில் புலச்செந்நாப்
போதார் புனற்கூடற் கச்சு”

என்னும் நல்கூர்வேள்வியார் பாடலில், “உத்தரமதுரைக்குக் கீதாசாரியனாகிய ஸ்ரீ கண்ணபிரான் எத்துணை விசேடமுடையரோ, அத்துணை, தென்மதுரைக்குத் திருக்குறளாசிரியராகிய திருவள்ளுவர் விசேடமுடையர்” எனக்கூறப்படுதலினின்று, நம் தெய்வப்புலவரது ஊர் மதுரை யென்பது நன்கு பெறப்படுமன்றோ?

---

பத்திராசிரியர்.